# மறைஞானி

**Dharmaram Publications**
**No. 509**

# மறைஞானி

## அருட்பணி டன்ஸ்டன் அடிகளார்

**K. M. சாக்கோ**

(சாக்கோச்சன் கண்ணணாய்க்கல்)

# மறைஞானி

**அருட்பணி டன்ஸ்டன் அடிகளார்**

**K. M. Chacko**
(Chackochan Kannanaikal)
Kuniamuthur
Coimbatore  641 008
E-mail : strokescreatives@gmail.com

©Preshitha Communications, Coimbatore

First Published 2021

ISBN : 978-81-954112-7-6

Cover : **Ms. Sruthi Rose**
Layout : **Strokes Designers & Printers**
Coimbatore 641 012

Printing :
**Vianni Printings**
Kochi

Price : **Rs. 50 /.**

Publisher :
**Preshitha Communications**
Little Flower Mission Centre
PO Bharathiyar University,
Coimbatore 641 046, Tamilnadu, India

&

**Dharmaram Publications**
Bangaluru 560 029

# பொருளடக்கம்

தெளிவான வழி காட்டி ........ 5

விளக்குத்தண்டில் வைக்கப்பட்ட தீபம் ........ 8

திருச்சபை முன்நிறுத்தும் வழிகாட்டிகள் ........ 11

1. இந்தியாவிற்கு ஒரு புனிதர் ........ 14

2. குடும்பம் புனிதத்தின் விளைநிலம் ........ 18

3. புதுநன்மை நாட்கள் ........ 21

4. அன்புள்ள அக்கா... குஞ்ஞேத்தி ........ 26

5. தேவசி... எனது நண்பன் ........ 31

6. அன்னையின் உறுதி ........ 36

7. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை ........ 42

8. இறையழைத்தலுக்கு அர்ப்பணம் ........ 47

9. உண்மையே உய்விக்கும் ........ 53

10. அபிஷேகமுள்ள குருத்துவ பயிற்சியாளர் ........ 59

11. ஏழ்மை எனும் பலம் ........ 64

12. அங்கீகரிக்கப்பட்ட ஆளுமை ........ 69

13. இயற்கையின் காதலன் ........ 74

14. நிரந்தர இறை பிரசன்ன உணர்வில் ........ 79

15. தந்தையின் இல்லம் நோக்கி ........ 84

## அணிந்துரை



**அருட். ஸாஜூ சக்காலக்கல் சி.எம்.ஐ.**
பிரேஷிதா துறவற மறைமாநில முதல்வர்
கோயம்புத்தூர்.

# தெளிவான வழி காட்டி

'**ம**றை' என்பது 'ஒளித்தல்' எனவும் 'வேதம்' எனவும் பொருள்படும். வேதத்தில் மட்டுமல்லாமல் எங்கும் மறைப்பொருளானவன். எப்பொருளிலும் உட்பொருளாக ஒளிந்திருப்பவன் இறைவன். எங்கும், எதிலும் திகழும் இப்பரம்பொருளை நன்கறிந்தவன் மறை ஞானி. இந்த அறிவானது முறைப்படியான கல்வியால் பெறுவதல்ல. மாறாக, விண்ணையும், மண்ணையும் ஆள்பவன் அறிஞர்களுக்கு மறைத்துக் குழந்தை மனமுடையவர்களுக்கு இந்த மறைஞானத் தை வெளிப்படுத்தத் திருவுளமாகிறார், (மத். 11:25). தூய உள்ளத் துடன் அந்த வெளிப்பாட்டை ஏற்றுக் கொண்டு அதன் உட்பொருளா கிய இறைமகனாரிடம் இடையறாத நட்புறவில் ஒன்றித்து வாழ்பவன் இறைஞானத்தின் முழுமையை நோக்கிச் செல்கிறான்; இறைஞானி யாகிறான்.

அருட்பணி. டண்ஸ்டன் அடிகளார் ஓர் இறைஞானி. இறைவனி டம் மிக நெருக்கமாக, ஆழ்ந்த நம்பிக்கையுடன் வாழ்ந்து அவர் இறைஞானியானார். இந்த இறைஞானத்தை அடிகளார் ஒரே நாளில் பெற்றவரல்ல. தம் மூத்த சகோதரி குஞ்ஞேத்தியிடமிருந்து கற்றுக் கொண்ட புனிதத்தின் முதல் பாடங்களை உள்ளூர உணர்ந்து சிறுவயதிலேயே இறைவனை அடைவதற்கான அரிய முயற்சியைத்

தொடங்கினார். ஒருவனைப் புனிதப் பாதையில் இட்டுச் செல்வதில் குடும்பம் எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இவரது வாழ்க்கை வரலாறு திகழ்கிறது.

குழந்தை பருவத்திலேயே தான் ஒரு புனிதன் ஆகவேண்டும் என ஆர்வம் கொண்டிருந்த அடிகளார் தான் பின்பற்ற வேண்டிய வாழ்க் கை நிலை 'துறவறம்' என்பதைக் கண்டடைந்தார். இந்திய மண்ணில் தோன்றிய முதல் கத்தோலிக்கத் துறவற சபையான அமலோற்பவ அன்னையின் கர்மேல் சபையில் (சி.எம்.ஐ.) உறுப்பினரானார். இச்சபையின் கோயம்புத்தூர் பிரேஷிதா துறவற மறை மாநிலத்தில் தனது வாழ்நாளின் அதிக பங்கையும் செலவழித்தார்.

துறவறம் என்பது தாம் ஒருவர் மட்டும் இறைவனைத் தேடு வதோடு முடிவடைந்து விடுவதாக அடிகளார் கருதவில்லை. மாறாக, பிறரையும் அவ்வழியில் ஊக்குவிக்கும் ஒன்றாகத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டிருந்தார். ஒரு துறவியின் வாழ்க்கை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை தூய்மையான தம் வாழ்க்கை வழியாக உரக்கக் கூறினார். இவர் எங்கும் எதிலும் இறைவனைக் கண்டார். விண்ணகப் பேரின்பத்தை அடைவதற்கான வழிமுறைகளை மிகுந்த அக்கறையுடன் பின் பற்றினார். குறிப்பாக நீதி, நேர்மை, உண்மை, அமைதி போன்ற நற் பண்புகளை வாழ்க்கை முழுதும் முழுமையாகக் கடைபிடித்தார். இவ்வாறு புனிதமான அவரது வாழ்வு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றது.

தனது துறவற வாழ்வின் பெரும்பகுதியைத் துறவற குருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பணியில் ஒப்புக் கொடுத்தார் அருட்பணி டண்ஸ்டன் அடிகளார். தனது தனிப்பட்ட வாழ்க்கை முறையால் துறவிகளுக்குத் தெளிவான வழி காட்டினார். எனது துறவறப் புகுநிலையில் அவரது வழிநடத்துதலைப் பெறும் பேறையும் நான் அடைந்துள்ளேன். அடிகளாரின் வாழ்க்கை விழுமியங்களை

இந்நூல் மூலமாக தமிழில் தொகுத்து வழங்கும் திரு. K. M. சாக்கோ (சாக்கோச்சன் கண்ணனாய்க்கல்) அவர்களும் துறவற குருத்துவ மாணவனாக அடிகளாரின் வழிநடத்துதலில் அவரோடு வாழும் வாய்ப்பைப் பெற்றவன் எனப் பெருமை கொள்பவர். நாங்கள் இரு வரும் இளம் குருமடத்தில் உடன் பயின்றவர்கள். இந்நூலை எழுத அவர் அருட்பணி. போளி பய்யப்பிள்ளி சி.எம்.ஐ. அவர்கள் மலை யாள மொழியில் எழுதி வெளியிட்ட 'சுதார்யம் சுந்தரம்' (Transparent and Beautiful) என்ற நூலை ஆதாரமாக்கியுள்ளார். இப்புத்தகத்துக்கு மிகவும் பொருத்தமாக "மறை ஞானி" எனப் பெயரையும் சூட்டினார்.

அருட்பணி. டண்ஸ்டன் அவர்களின் வாழ்க்கையைத் தமிழ் மக்களும் அறிந்து பயன்பெறுமாறு அடிகளாரின் வாழ்க்கை வரலா றை தமிழில் தொகுத்து வழங்கும் திரு. சாக்கோச்சனின் அரிய முயற்சியைப் பாராட்டுகிறேன். கோவை பிரேஷிதா துறவற சமூகத் தின் பெயரிலும் எனது தனிப்பட்ட பெயரிலும் அவருக்கு மனமார்ந்த நன்றியை செலுத்துகிறேன்.


அனைவரும் இந்நூலைப் படித்து மகிழ வாழ்த்துகிறேன். விண்ணகப் பேரின்பத்தை நோக்கிப் பயணம் செய்யும் நம் அனை வருக்கும் அன்னாரின் வாழ்க்கை விழுமியங்கள் வழிகாட்டுவதாக. இறைவன் அனைவருக்கும் ஆசியருள்வாராக.

Coimbatore
27.11.2021

Preshitha Provincial House
Coimbatore

(101st Birthday of Fr. Dunston)

**அருட். போஸ்கோ ஞானராஜ்** OFM Cap.
சாந்தி ஆசிரமம்
காந்திபுரம், கோவை



# விளக்குத்தண்டில் வைக்கப்பட்ட தீபம்

**தி**ருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் புனிதராக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். திருமுழுக்கு வாழ்வில் புனிதத் தன்மையில் வாழ வளர துறவற சபைகள் மிகவும் துணை புரிகின்றன. ஏனெனில் துறவற வாழ்வின் சட்டதிட்டங்களை ஒரு கிறிஸ்தவனின் வாழ்வை ஒழுங்குபடுத்தி ஒருவர் புனித பாதையில் கிறிஸ்துவின் பாத சுவடுகளை பின்பற்றி புனிதராய் வாழ வழிவகுக்கிறது. அந்த வகையில் CMI சபையைச் சார்ந்த அருட்பணியாளர் டன்ஸ்டன் அடிகளார் அந்த சபையின் சட்ட திட்டங்களைக் கடைபிடித்து புனித வாழ்வு வாழ்ந்தார். அவர் தன்னையே புனிதப்படுத்திக் கொண்டு இந்த திருச்சபையைச் சார்ந்த இளம் துறவிகளுக்கு தன் சொல்லாலும், செயலாலும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்தார். தன் ஜெப வாழ்வில் கிறிஸ்துவோடு இணைந்திருந்து கிறிஸ்துவின் உண்மைச் சீடராக வாழ்ந்தார்.

விளக்குத்தண்டில் வைக்கப்பட்ட தீபம் போல இருந்து பலருடைய வாழ்வில் ஒளியேற்றினார். தான் புனிதராவதே இயேசுவின் விருப்பம் என்பதை உணர்ந்த அவர் ஒரு உண்மைச் சீடராக புனிதராக வாழ்ந்தார். புனிதர்கள் நம்மைப்போல சாதாரண மனிதர்களாக இருந்தாலும் இறைவனுக்காக அசாதரண முறையில் வாழ்ந்து பல அரும்பெரும் செயல்புரிந்தவர்கள். அதற்கு முக்கிய காரணம்

அவர்கள் எப்போதும் இறை பிரசன்னத்திலே வாழ்ந்தார்கள். திருமுழுக்கு யோவான் கூறியதைப் போல அவர் வளரவேண்டும் தான் தளரவேண்டும் என்று எண்ணியவர்கள். எனவேதான், அவர்கள் வழியாக இறைவன் அரும்பெரும் செயல்கள் புரிந்திருக் கிறார்.

புனிதர்கள் நம் வாழ்விற்கு வழிகாட்டிகள். அந்த வகையில் அருட்பணி டன்ஸ்டன் அடிகளார் பலரை இறைவனிடம் சேர்த் துள்ளார். அவரின் வாழ்வு நம் ஒவ்வொருக்கும் ஒரு ஊக்கம் அளிக் கும் அருமருந்தாக அமையட்டும். அவர் தன் வாழ்விலே இயேசுவை முன்னிறுத்தி தன்னையே தாழ்த்திக் கொண்டார். அவரது வாழ்வு நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையட்டும்.

நாமும் கிறிஸ்தவோடு இணைந்து செயல்பட்டால் நாமும் புனிதர்கள் ஆவோம் என்ற நம்பிக்கையை நம்மில் வளர்க்கட்டும். அவரது புனிதமான வாழ்வு அவரை ஒரு நாள் புனிதரின் வரிசையிலே இடம்பெறச் செய்யட்டும் என ஜெபிப்போம். அவர்தாமே நம் ஒவ்வொருவரும் உன்னத இறைவன் முன்பு நமக்காக பரிந்து பேசட்டும். அவரைப்போல நாமும் புனிதராக வாழ முயற்சிப்போம். இயேசுவும் அவரது அன்பு அன்னையும் கண்ணீர் நிறைந்த இம்மண்ணின் வாழ்வில் நமக்கு துணைபுரிவார்களாக. புனிதம் மிக்கவராக வாழ்ந்த அருட்பணியாளர் டன்ஸ்டன் புகழ் என்றும் நீடுடி நிலைக்கட்டும்.

1980 களில் விசுவாசபுரம் மிஷன் காந்திபுரம் பாத்திமா பங்கின் துணைபங்காக இருந்தது. திருப்பலி நிறைவேற்றவும் பங்கு மக்களைச் சந்திக்கவும் அடிக்கடி எனக்கு அங்கு செல்லவேண்டி யிருந்தது. அந்நாட்களில் விசுவாசபுரத்திலிருந்த CMI சபையின் குருத்துவ பயற்சி இல்லத்தில் அருட். டன்ஸ்டன் அடிகளாரை நேரடி யாக சந்திக்கும் அரியவாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்பொழு தெல்லாம் தமிழ் சரியாக பேசவராதபொழுதும் தனது மந்திர

புன்னகையால் என்னுடன் உரையாட முயற்சிப்பார். அடிகளாருடன் இருந்த கணங்களை பேறுபெற்றவையாக கருதுகிறேன். புனிதமான வையாக எண்ணுகிறேன்.

அருட். டன்ஸ்டன் அடிகளாரைத் தமிழ் பேசும் மக்களிடையே அறிமுகப் படுத்தும் நோக்கமாக அவரது வாழ்க்கையை 'மறைஞானி' புத்தகமாக உருக்கொடுத்த அன்பு தம்பி திரு. K. M. சாக்கோ அவர் களைப் பாராட்டுகிறேன். இறைவன் அவரை அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

அனைவரும் இந்நூலைப் படித்து மகிழ வாழ்த்துகிறேன். இறைவன் அனைவருக்கும் ஆசியருள்வாராக.

முகவுரை



K.M. சாக்கோ

# திருச்சபை முன்நிறுத்தும் வழிகாட்டிகள்

**இ**ந்தக் குறுநூல் அருட். டன்ஸ்டன் ஒலக்கேங்கில் CMI என்னும் துறவற குருவானவரைப் பற்றியது. ஃபாதர் (Father), குருவானவர், அருட்பணியாளர், அடிகளார் போன்ற வார்த்தைகள் கத்தோலிக்க சபையைச் சார்ந்தவர்களுக்கு பழக்கமானவை. இன்னும் சொன்னால் நெருக்கமானவைகூட. துறவற குரு என்ற சொல்லும் அப்படியே. ஏனெனில், நமது ஆத்மீய வாழ்வில் அன்றாடம் நம்மைத் தொட்டுச் செல்லும் அர்ச்சிஷ்டவர்கள் (புனிதர்கள்) அனைவருமே துறவற சபையினர்தான். புனித பிரான்சீஸ் அசீசியார், புனித அந்தோணியார், புனித சவேரியார், புனித ஜான் பிரிட்டோ, புனித அன்னை தெரேசா, புனித சாவறா அடிகளார், புனித அல்போன்சம் மாள் என்று துவங்கும் புனிதர்களில் பெரும்பாலானவர்களும் நமக்கு வழிகாட்டிகளாக திருச்சபை முன்நிறுத்தும் துறவற சபையினர்தான்.

இதுபோன்ற ஒரு துறவற சபையே CMI (Carmetlites of Mary Immaculate) அமலோற்பவ அன்னையின் கார்மேல் சபையினர். இந்திய மண்ணில் தோன்றிய முதல் கத்தோலிக்க துறவற சபை. 1831-இல் கேரள மண்ணில் புனித சாவறா அடிகளாரால் நிறுவப்பட்டு உலகம் முழுவதும் பரந்து கிடக்கும் இந்த துறவற சபையில் இன்று ஆயிரக்கணக்கான குருமார்கள் கல்விப்பணி, சமூக சேவை,

மருத்துவ சேவை, இறை மக்கள் பணி போன்ற சேவைகள் மூலம் இறை இயேசுவின் கரங்களாக செயல்பட்டு அருட்பணியாற்று கிறார்கள்.

இந்தச் சபையின் கோவை துறவற சபை மாநிலத்தின் (Coimbatore Preshitha Province) உறுப்பினர்தான் நாம் இந்தப் புத்த கத்தின் மூலம் அறிமுகப்படுத்தும் அருட்தந்தை டன்ஸ்டன் அடி களார். 1920இல் பிறந்து 2006இல் மறைந்த மறைஞானி.

இவரது தனிச்சிறப்பு என்பது என்னவென்றால், தனது துறவற வாழ்வின் பெரும் பகுதியையும், துறவற குருத்துவ மாணவர்களின் பயிற்சிக்காகவே செலவழித்தார் என்பதே. துறவறம் என்பதே சாதாரண மக்களுக்கு புரியாத புதிராக இருக்கும் இக்காலகட்டத்தில் தெளிவான வழிகாட்டுதலுடன் வெற்றிகரமாக இளைஞர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை வழி நடத்திய அடிகளாருக்கு அப்படி என்னதான் தனிச்சிறப்புகள் இருந்தன என்பதை எளிதாக ஆராய்ந்து முடிவு கட்ட முடியாது. எனினும் அவரது வாழ்வு தரும் செய்தியைப் பதிவு செய்வது என்பது அவரைக் கண்டவர்களுக்கும் அவருடன் வாழ்ந்தவர்களுக்குமான கடமை என்றே உணர்கிறேன்.

அடிகளாரைப் பார்த்தும், அவரைப்பற்றி நிறையக் கேட்டு மிருந்தாலும், குறுகிய காலத்திற்கெனினும், அவரது வழி நடத்து தலில் அவரோடு வாழும் வாய்ப்பினைப் பெற்றவன் என்பதை பெரு மையுடன் நினைவுகூருகிறேன். துறவற வாழ்வினை ருசித்துப் பார்ப் பதற்கு எனக்குக் கிடைத்த அந்த அரிய வாய்ப்பினை வாழ்நாள் முழுமைக்கும் பயன்படும் அரிய பொக்கிஷமாக இதயத்தில் பாது காக்கிறேன். அந்த குறுகிய காலத்திலும், அதற்குப் பின்னரும் அடிகளாரது வார்த்தைகள் என் வழிகளில் விளக்காய் ஜொலித்தன என்பதை பெருமையுடன் அறிக்கையிடுகிறேன்

இந்தப் புத்தகம் எழுத ஆதாரமாக நான் எடுத்துக் கொண்டது அருட். போளி பய்யப்பிள்ளி CMI அடிகளார் மலையாளத்தில் எழுதி

2020-ல் வெளியிட்ட “சுதார்யம் சுந்தரம்” (Transparent and Beautiful) என்ற புத்தகம். சபை அங்கத்தினர்களையும், அடிகளாரது குடும்பத் தாரையும், அவரது முன்னாள் மாணவர்களையும் கலந்து, அடிகளாரின் சொந்தக் குறிப்புகளோடு அவற்றை ஒருங்கிணைத்து நீண்ட நாளைய கடின உழைப்புக்குப்பின் உருவான உயர்ந்த இலக்கிய ரசனையோடு ஆத்மீக மணம் கமழும் அந்தப் படைப்பு எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எனது முயற்சிக்கு அனுமதியளித்த அடிகளாருக்கு நன்றிகளை காணிக்கையாக் குகிறேன்.

இந்தப் பணியை எனக்கு ஒப்படைத்து, ஊக்கமாகவும் உதவி யாகவும் இருந்து என்னை வழி நடத்திய CMI சபை கோவை பிரேஷிதா துறவற சபை மாநில தலைவர் அருட். ஸாஜு சக்கா லக்கல் CMI அடிகளாருக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்த முயற்சி பலருக்கு பயன்பட வேண்டும் என்றே விழை கிறேன்... நம்புகிறேன். அதையே இறைவனிடம் வேண்டிக் கொள் கிறேன்.

# 1. இந்தியாவிற்கு ஒரு புனிதர்



**நா**ம் வாழும் காலத்தில் வாழ்ந்து, மறைந்த ஒரு புனிதரைப் பற்றியது இந்த புத்தகம். புனிதர் (Saint) என்ற வார்த்தைக்கு எல்லோரும் சொல்லும் பொருளுக்கும், கத்தோலிக்கத் திருச்சபையினர் சொல்லும் பொருளுக்கும் வேறுபாடு உண்டு. கடவுளுக்கு நெருக் கமாக இருந்து, மனித குலத்திற்கு நலம் பயக்கும் நற்செயல்கள் புரிந்து, திருச்சபையின் படிப்பினைகளை அணுவணுவாக வாழ்ந்து, மகிமையான மரணத்துடன் தனது வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்யும் நபர்களை, மாட்சிமை நிறைந்த அந்த சிகரங்களை 'புனிதர்' என்ற அடைமொழியுடன் திருச்சபை மக்கள் கொண் டாடுவர்.

அந்த குறிப்பிட்ட நபரின் மரணத்திற்குப் பிறகே பிறருக்கு முன்மாதிரியான வாழ்க்கையாக்க புனிதர் என்ற பட்டம் அவருக்கு வழங்கப்படும். நீண்ட நாட்கள் தொடரும் தேடல்களுக்கும், வழக்காடுமன்றங்களுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் உண்மை அறியும் சோதனைகளுக்கும் பிறகே திருச்சபையின் அந்த அறிவிப்பு வரும். அவரது வேண்டுதல் மூலம் நடந்த ஒரு புதுமை அல்லது அற்புதம்

(Miracle) இதற்கு ஆதாரமாக இருக்கும். மருத்துவத் துறை கைவிட்ட நோயிலிருந்து குணப்படுதல் அல்லது நடைபெற வாய்ப்பே இல்லாத ஒரு புதுமை இந்த புனிதரின் மூலம் நடந்திருப்பது சந்தேகமின்றி அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டும். நீண்ட பல நாட்கள், வருடங்கள்கூட ஆகலாம் இந்த நடைமுறை நிறைவு பெற.

நமது வாழ்வு காலத்திலேயே வாழ்ந்து நமது காலத்திலேயே மறைந்து புனிதராகவும் அறிவிக்கப்பட்ட அன்னை தெரேசாவை நாம் மறக்க முடியாது. கல்கத்தா நகரின் தெருக்களில் குப்பைகளோடு குப்பையாக கிடந்த, மரணத் தருவாயிலிருக்கும் மனிதர்களை தூக்கி வந்து அவர்களுக்கு சிகிச்சையளித்து கௌரவமான மரணத் துடன் இவ்வுலகிலிருந்து அவர்களை வழியனுப்பி வைத்த அன்னை தெரேசாவை யாருக்கும் அறிமுகப்படுத்த தேவையில்லை. வாழ்ந்த காலத்திலேயே ஒரு புனிதையாக வாழ்ந்த அன்னை. அவருக்கும் இருந்தது இதுபோன்ற நடைமுறைகள்.

புனிதர் (Saint) என்ற சொல்லைக் கேட்டு பழக்கமில்லாதவர் களுக்காகவும், இந்தப் புத்தகத்தைப் படிக்கும் பிற சமயங்களைச் சார்ந்த சகோதரர்களுக்காவும் மேற்கண்ட பகுதியைத் தந்திருக் கிறேன்.

இந்த முன்னுரைகளை எல்லாம், புனிதராக திருச்சபை அறிவிக்கவில்லை என்றாலும் ஒரு புனிதராகவே நமது காலத்தில் வாழ்ந்து மறைந்த ஓர் இறையாண்மையைப் பற்றிச் சொல்லத்தான். சின்னஞ்சிறு வயதிலிருந்து ஒரு புனிதராக வேண்டும் என்ற குறிக் கோளுடன் வாழ்ந்தவர். பாரத நாட்டில் இதுவரை யாரும் புனிதராக அறிவிக்கப்படவில்லை; அறிவிக்கப்படும் முதல் புனிதராக நான் இருப்பேன் என்று உறுதியெடுத்துக் கொண்டவர். நினைவு தெரிந்த காலம் முதல் ஆண்டவருக்கு பிரியமானதை மட்டுமே செய்து வந்தவர்... அருட் டன்ஸ்டன் CMI அடிகளார்.

அட்டைப் படத்தில் அடிகளாரது உருவம் பெரிதாக அச்சடிக் கப்பட்டுள்ளது. தலையில் ஒரு முடிகூட இல்லை. ஏன் இப்படி? மொட்டை அடித்துக் கொண்டாரா என்று கேட்கத் தோன்றும். புருவத்தில்கூட முடியில்லையே? சிகிச்சையின் பொருட்டு அவர் சாப்பிட்ட ஒரு மருந்தின் பக்க விளைவாக முடியை முழுமையாக இழக்க நேர்ந்தது. அவர் அணிந்திருக்கும் அகலமான மூக்குக் கண்ணாடியும் அதன் விளைவே. முடி மீண்டும் முளைக்க மருத்து வமும் மருந்தும் இருந்தும் அதன் வழியே கவனம் செலுத்தாமல் முழு ஈடுபாட்டுடன் கடமையாற்றினார். அனைவரையும் கவர்ந்த ஆளுமை.? இளைஞர்கள் மனதளவில் இதய தெய்வமாகக் கொண்டாடும் உருவம்?

இனி அவரது ஆடை... கிழிந்து சுக்கு நூறான ஆயிரம் தையல்களுள்ள கந்தை... மாட்டுத் தொழுவத்தில் பிறந்த ஏசுவை... ஏழையிலும் ஏழையாய் கந்தலால் சுற்றப்பட்ட இயேசுவை... பின்பற்றி அவர் தேர்ந்து கொண்ட அங்கி... புனித அசீசியாரை மாதிரியாய் ஏற்றுக்கொண்டு வறுமையைப் புண்ணியமாய் தேர்ந்து கொண்ட தியாகி.

தேய்ந்து தேய்ந்து ஓட்டையாய்ப் போன சாதாரண செருப்புகள். நடந்தே பழகிய கால்கள், நடப்பதை ஒரு தவமாகக் கொண்டவர். ஒவ்வொரு காலடியிலும் இயேசப்பாவின் வழிகளைக் பின்பற்றிய தேடலாளர்.

அழகோ, அவரது உருவமோ, உடையோ, செருப்போ அவரை ஒரு புனிதருக்கு இணையாக்கவில்லை. வார்த்தை ஜாலங்கள் உள்ள பேச்சோ, உவமைகளும், கதைகளும், கற்பனைகளும், நகைச்சுவையும் நிறைந்த உரையோ என்றால் அதுவுமில்லை. சற்றும் கவர்ச்சியற்ற பேச்சாளர். அவர்... தொடங்கிய தலைப்பை மறந்து விட்டு தனக்கு முன்னால் உட்கார்ந்திருப்பவர்களிடம் அதைக் கேட்பார். அவரது பேச்சு என்னைக் கவர்ந்தது என்றோ... அவரது

மேற்கோள் எனக்குப் பயன்பட்டது என்றோ யாரும் சொல்லக் கேட்டதுமில்லை.

பிறகு என்ன? அழகற்ற, வடிவற்ற, வார்த்தைகளற்ற அந்த நபரைப்பற்றி ஏன் எழுதுகிறோம்?.

அனுபவங்கள்...அனுபவங்கள் மட்டும்... அடிகளாரை நேரில் பார்த்தவர்களும், அவருடன் வாழ்ந்தவர்களும் பெற்றுக் கொண்ட இறை பிரசன்ன அனுபவம். மிதமாகவே பேசி குறைவாகவே பேசி தான் வாழ்ந்து அனுபவித்த இறையன்பை தன்னைச் சுற்றி இருந்தவர்களுக்கு பகிர்ந்தளித்த அரிய தெய்வீக அனுபவம்.

CMI துறைவறச் சபையின் அங்கமாய் இருந்து இளம் துறவிகளுக்கு பயிற்சியாளராகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும், வாழும் முன்மாதிரியாகவும் ஜொலித்து, காலமெல்லாம் இறை பிரசன்னத்தின் தூதுவராகவும், துறவற வாழ்வின் கலங்கரை விளக்கமாகவும் வாழ்ந்த துறவற சிங்கம்... தந்தை டன்ஸ்டனின் நூறாவது நினைவு ஆண்டில் அன்னாரது வாழ்வையும், பிஞ்சு வயதிலேயே துவங்கிய அவரது இறைதேடலையும், சாவுக்குப்பின் ஒரு புனிதனாக வேண்டும் என்று தான் கொண்டிருந்த உறுதியையும் படம் பிடித்து காட்டும் ஒரு எளிய முயற்சி, அவ்வளவுதான்.



# 2. குடும்பம் புனிதத்தின் விளைநிலம்

அந்தத் தம்பதியினருக்கு ஆறு குழந்தைகள். கேரளா திருச்சூர் மேற்றிராசனத்தில் பாவறட்டி பங்கிற்குட்பட்ட புதுமனைசேரி ஒலக் கேங்கல் ஆனட்டி குடும்பத்தின் பவுலோஸ், மரியம் தம்பதியினருக் கு பிறந்த நாலாவது குழந்தைக்கு ஞானஸ்தானத்தில் மத்தாயி என்று பெயர் சூட்டப்பட்டது. குடும்பத்தினர் அந்தக் குழந்தையை 'இட்டுப்புண்ணி' என்றே செல்லமாக அழைத்தனர்.

அனைவருக்கும் செல்லக்குழந்தையாக வளர்ந்தான் இட்டுப்புண்ணி. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே இறை சூழலிலேயே வளர்ந்தான். அவனது வீடும் குடும்பமும் யேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. ஒழுக்கமான வாழ்க்கை முறையும், தினம் தவறாத குடும்ப ஜெபமும் அவனது குடும்பத்தின் முத்திரையானது.

இட்டுப்புண்ணி சிறு வயதில் நண்பர்களுடன் விளையாடுவதே திருப்பலி ஒப்புக் கொடுத்துதான். அப்பமும், திராட்சை ரசமும்

காணிக்கை அளித்து மனம் உருகி வேண்டும்போது அந்தக் குழந்தையின் கண்களில் திவ்ய ஒளி மின்னும். சாதாரணமாக அந்த வயது குழந்தைகள் கல்லையும் மண்ணையும் வைத்து விளையாடு வார்கள். ஆனால் இட்டூப்புண்ணியும், நண்பர்களும் கோவில் கட்டி விளையாடினார்கள். பட்டு குடைகளுடன் திவ்ய நற்கருணை ஊர் வலம் வீட்டுக்குள்ளிருந்து புறப்பட்டு வீட்டைச் சுற்றி வந்து அவர்கள் கட்டிய குட்டி ஆலயத்தில் ஆசீரோடு நிறைவடையும். அனைத்திலும் இட்டூப்புண்ணிதான் குருவானவர். அரைகுறையாக அவர்கள் பாடும் திருப்பலி பாடல்கள் நமக்கு விண்ணக நினைவையூட்டும்.

ஐந்து வயதிலேயே தனியாக கோவிலுக்குப் போவான் இட்டூப்புண்ணி. நண்பர்களும், சகோதர சகோதரிகளும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் திருப்பலிக்குச் செல்வதை முடக்கமாட்டான். வீட்டிலிருந்து ஆலயத்துக்கு முக்கால் மைல் தூரமிருக்கும். செல்லும் வழியில் ஆள் நடமாட்டமில்லாத காட்டுப்பகுதி போன்ற ஒரு இடம் உண்டு. அந்த இடத்தைப் பற்றி பயப்படுத்தும் கதைகள் சொல்லப்பட்டன. அதைக்கேட்டு பெரியவர்களே பயப்படுவர். ஆனால் அவையொன்றுமே இட்டூப்புண்ணியின் உறுதிப்பாட்டை குலைக்கவில்லை. மனதில் சற்றே பயமிருந்தாலும், தனது மூத்த சகோதரி குஞ்ஞேத்தி கொடுத்த மனத்திடம் அவனுக்கு துணை நின்றது.

தொலைக்காட்சியும், வானொலியும், தொலைபேசியும், வாட்ஸ் அப் போன்றவை எதுவும் இல்லாத அந்தக்காலம். புத்தகங் களை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் அதற்கு செவிமடுப்பதே பொழுது போக்கு. புதிய ஏற்பாடு, புனிதர்களின் கதைகள் குறிப்பாக சிறுமலர் திரேசம்மாள், அம்மா திரேசம்மாள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள் வாசிக்கப்படும். தன் வீட்டிலுள்ளோரும் அக்கம்பக்கத்து சிறுவர்களும் அதை சிரத்தையுடன் கேட்டார்கள். தனது மூத்த சகோதரி குஞ்ஞேத்தி தலைமையேற்பாள். ஒவ்வொரு பகுதியாக

வாசித்து அதற்கான விளக்கத்தையும் அளிப்பாள்.

"நவமாலிகா" என்ற தலைப்பில் புனித தெரேசம்மாளைப் பற்றிய புத்தகம் பலமுறை வாசிக்கப்பட்டது. குஞ்ஞேத்தி அதை வாசித்து விளக்கும்போது குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களும் சுற்றி நின்று அதைக் கேட்டார்கள். வாசிப்பு நேரத்தில் அப்பா அங்கு இருந்தால் வாசித்த பகுதியில் இருந்து கேள்விகளைக் கேட்டு பதில் சொல்லச் சொல்வார். சில சமயங்களில் விளக்கமும் உபதேசமும் அளிப்பார். தனது தந்தை அளிக்கும் விளக்கங்களை சிரத்தையுடன் கேட்டு இரசிப்பான் இட்டுப்புண்ணி.

தேவாலயத்தில் சிறுமலர் புனித தெரேசம்மாளுக்கு பெரிய விழாக்கள் எடுக்கப்படும். அவ்வேளைகள் அனைத்தையும் தனது புனித பயணத்திற்கான வாய்ப்புகளாக கருதினான் இட்டுப்புண்ணி. அவனது தாயார் மரியம் தெரெசம்மாளைப்பற்றிய "செறுபுஷ்பா னுகரணம்" என்ற சிறிய புத்தகமொன்றை அவனுக்கு வாங்கிக் கொடுத்திருந்தாள். புனித தெரசம்மாளின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைத் தொகுத்து வழங்கப்பட்டிருந்த குழந்தைகளுக்கான அந்தப் புத்தகம் இட்டுப்புண்ணிக்கு மிகவும் பிடித்திருந்தது. திரும்பத் திரும்ப அந்த புத்தகத்தைப் படித்தான். அது மட்டுமல்ல, புனித தெரசம்மாளைப் பற்றிய உரையாடல்கள் வீட்டிலேயே பல முறை கேட்டிருக்கிறான். "ஒரு புனிதனாவேன்" என்ற உறுதியான, பிடிவாத மான தீர்வொன்றை எடுப்பதற்கு இந்த குடும்பச் சூழல்கள் அவனுக்கு பேருதவியாக இருந்தது.

# 3. புதுநன்மை நாட்கள்



**க**த்தோலிக்க பிள்ளைகளுக்கு புது நன்மை என்பது அவர்களது வாழ்விலேயே மிகவும் மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் மிக்க நாள்; அவர்கள் கௌரவிக்கப்படும் நாள். இன்றெல்லாம் ஒரு திருமணத் திற்கு இணையான கொண்டாட்டமாக அதை மாற்றி விட்டோம். அழைப்பிதழ் அச்சிட்டு, மண்டபம் வாடகைக்கு எடுத்து அல்லது வீட்டையே மண்டபம் போல அலங்கரித்து, வாழ்த்த வருவோருக்கு நன்றிகூறும் அட்டைகள் அளித்து, புது நன்மை எடுக்கும் குழந்தை யின் உருவப்படம் பெரிதாக்கி பின்னணியில் அலங்கரித்து ஏக களேபரம் செய்கிறோம்.

கிட்டத்தட்ட 80, 90 ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு ஆடம்பர மெல்லாம் இல்லை. அன்று நிலவிய வறுமையும், ஆடம்பரங்களுக் கான வழிமுறைகளின்மையும் சடங்குகளின் எளிமையுமே அதற்குக் காரணங்கள்.

இன்று நாம் செய்வது போல அன்றெல்லாம் புது நன்மை பெறுவோர் பாவ சங்கீர்த்தனமும், புது நன்மையும் அடுத்தடுத்து

எடுத்துக்கொள்ள முடியாது. பாவசங்கீர்த்தனம் செய்து ஓராண்டா வது ஆகியிருக்க வேண்டும். 1927ஆம் ஆண்டு இட்டுப்புண்ணிக்கு ஆறரை வயதிருக்கும்போது ஒப்புரவு அருட் சாதனம் வழங்கப்பட்டது. அதற்குரிய தயாரிப்பாக அருட். கொர்னேலியூஸ் அடிகளார் பாலயூர் பங்கு தேவாலயத்தில் புது நன்மை பெறுவோருக்காக நடத்திய தியானத்தில் கலந்து கொண்டான் சிறுவன் இட்டுப்புண்ணி.

பாவ சங்கீர்த்தனம் செய்யும் முன் அவன் யோசித்தான். நான் என்ன பாவத்தைச் சொல்வது? எனக்கிருக்கும் கோபமும், பிடி வாதமும் ஒரு பாவமா? அல்லது அது எனக்கே உரித்தான தாழ்வு மனப்பான்மையின் மறு உருவமா? கோபத்திலும் பிடிவாதத்திலும் கூட ஒரு நன்மை இருப்பதை உணர்ந்தான் இட்டுப்புண்ணி. உறுதி யான நிலைப்பாடு அல்லது எடுக்கும் முடிவில் மாறாத நிலை போன்ற ஆரோக்கியமான விளைவுகளும் அதில் உள்ளதே! அது எப்படி பாவமாகும்? அந்தக் கோபமும் பிடிவாதமும் பிறர் மனத்தைப் புண்படுத்தினால் நிச்சயம் அது பாவமே.

அந்த பிஞ்சு வயதிலும் பாவம் எது? சரி எது போன்றவற்றை பகுத்தறியும் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். அந்தப் பாவ சங்கீர்த்தனத்தை முழுமையான மன நிறைவுடன் செய் திருப்பானா என்பது ஆண்டவருக்கே வெளிச்சம். பாவத்தையும், புண்ணியத்தையும் பகுத்தறியும் அவனது முயற்சியின் காலகட்டத் தில்தான் முதல் பாவ சங்கீர்த்தனம் நடந்தது. வறண்ட மனத்துடனும் வற்றிப்போன இதயத்துடனும்தான் அவன் அந்த பாவசங்கீர்த்தனம் செய்தான்.

அந்த ஆறரை வயதுகால மனநிலையையும் அவன் அனு பவித்த மானசீகமான இறுக்கத்தையும் காகிதத்தில் குறித்து வைக்கும் அளவிற்கு ஆத்மீக தெளிவுள்ளவனாக இருந்தான். சிறுவன் இட்டுப்புண்ணி. பாவ சங்கீர்த்தனம் செய்யும்முன் இருந்த தனது மனநிலையையும் புனிதமான அந்த நிமிடங்களை தான்

எதிர்கொண்ட விதத்தையும் அதில் விவரித்தான். அது இறைவனுக்கும் அவனுக்கும் இடையே இருந்த உடன்பாடு.

தியான இறுதியில் பாவறட்டி பங்கு குருவான அருட். ஜான் பொறத்தூர் அடிகளாரிடம் பாவ சங்கீர்த்தனம் செய்து கொண்டான்.

1928, இந்த ஆண்டு இட்டுப்புண்ணிக்கு புது நன்மை...

வியாபாரத்தில் உண்டான கடன் மூலம் வறுமையில் இருந்த குடும்பத்திற்கு எளிமையான முறையிலாவது அந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்று இருந்தது.

ஆலயத்தில் திவ்ய நற்கருணைபற்றியும், புதுநன்மை பற்றியும் வகுப்புகளும், உபதேசங்களும் மிக இருந்தாலும் தனது அப்பா அவனுக்களித்த விளக்கமே அவனது உள்ளத்தைத் தொட்டது. வேத பாட வகுப்புகளில் தான் படித்தவற்றை அப்பா மீண்டும் சொல்லி விளக்கினார். பங்கு ஆலயத்திலும் சரி, அருகிலிருந்த பாவறட்டி CMI ஆசிரமத்திலும் சரி புதுநன்மைக்கான சிறப்பு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. புது நன்மைக்கு முந்தைய நாள் அவனது தாயார் அவனை ஆசிரமத்திற்கு அனுப்பி வைத்தாள். நேராக ஆசிரமம் சென்ற இட்டுப்புண்ணி அங்கிருந்த அருட். கொர்ணேலியூஸ் அடிகளாரைக் கண்டு புது நன்மைப் பற்றி தனக்கு சொல்லித்தருமாறு கேட்டுக் கொண்டான். அடிகளார் சிறுவனான அவனுக்கு புரியும் விதத்தில் சொல்லிக் கொடுத்தார். ஆனால், அவனது எதிர்பார்ப்பு அதைவிட அதிகமாக இருந்தது. அவனது ஆத்மீக தேவையையோ பசியையோ போக்கும் அளவுக்கு அங்கிருந்து எதுவும் கிடைக்கவில்லை. பக்தியில் முன்னேற சிறப்பான வழிகள் எதுவும் அவனுக்கு திறக்கப்படவுமில்லை.

அவனது குடும்பத்தார் அந்த புது நன்மை நாளை பெரும் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் தனது அன்பு குஞ்சேத்திக்கும் இன்னும் அவனை பக்தியில் மிகையாகச் செறிவூட்ட வேண்டியதாக தோன்றிது.

ஆண்டவரே வந்து தன்னுடன் ஒன்றாகும் நாள்... அந்த நாள் பயத்தையும், மனச் சிக்கலையும் தவிர அவனுக்கு வேறெதையும் தந்தபாடில்லை. அவனுக்கு தெரிந்த முறையில் திவ்ய நற்கருணை அருட்சாதனத்திற்குத் தயாரானான்.

புதுநன்மை எடுக்கும் சிறுவர் சிறுமியர் தலையில் ஒரு மலர் கிரீடம் வைத்து தேவாலயத்திற்குச் செல்வர். தனது தலையிலும் ஒரு மலர்கிரீடம் வருமென்று சிறுவன் இட்டுப்புண்ணி நினைத்தான். ஆனால் அதற்காக ஆசைப்படவும் இல்லை, வீட்டில் கேட்கவும் இல்லை. புது நன்மைக்காக அவன் செய்த ஆத்மீக முயற்சிகள் எந்த பயனையும் கொடுக்காத நிலையில், தலையில் மட்டும் ஒரு மலர்க் கிரீடம் வைத்துக் கொள்வதில் என்ன இருக்கிறது.

புது நன்மைக்கு முந்தைய நாள் மாலை வெளியிலிருந்து வந்த அப்பாவின் கையில் ஒரு பொட்டலம் இருந்தது. அவரை ஆர்வமுடன் வரவேற்ற அம்மா, கையில் என்னவென்று கேட்டாள்.

“புது நன்மைக்கு இட்டுப்புண்ணிக்கு மலர்கிரீடம் செய்ய வேண்டாமா?”

“அதை மடத்தில் சொன்னால் கன்னியர் தயாரித்துத் தருவார் களே”

“அதற்கு பணம் கொடுக்க வேண்டுமல்லவா? நமக்கே அழகான ஒரு மலர் கீரிடம் செய்யலாம் வாங்க”

இரவு ஜெபம், சாப்பாடு முடிந்து குடும்பமே ஒன்றாக அமர்ந்து அப்பாவின் தலைமையில் இட்டுப்புண்ணிக்காக மலர் கிரீடம் செய்யத் துவங்கினர். வெவ்வேறு வண்ணங்களில் பூக்கள் செய்தனர், இலைகள் செய்தனர், கொடிகள் செய்தனர். இறுதியில் அழகான ஒரு மலர்க்கிரீடம் உருவானது. இட்டுப்புண்ணியின் தலையில் வைத்து அளவு பார்த்தனர்... அழகு பார்த்தனர்... மிகுந்த ஆர்வத்தில் குடும்பமே ஒன்றாக இணைந்து தனது அன்பு மகனுக்கு

மலர்க்கிரீடம் செய்யத் தொடங்கி வெற்றிகரமாக அதைச் செய்து முடித்தபோது பொழுதே விடிந்திருந்தது.

காலை 7 மணிக்கு திருப்பலி. இட்டுப்புண்ணியை குளிப்பாட்டி அவனுக்கு நல்ல ஆடைகளை அணிவித்து கையில் அலங்கரித்த ஒரு மெழுகுவர்த்தியையும் கொடுத்தாள் குஞ்ஞேத்தி. விடிய விடிய இருந்து தாங்கள் தயாரித்த அழகான மலர்க் கிரீடத்தை தலையில் அணிவித்தாள். அனைவரும் சேர்ந்து இட்டுப்புண்ணியை திரு இருதய சொரூபத்தின் முன் நிறுத்தி அவனுக்காக ஜெபித்தனர். அவனது அண்ணனுடன் தேவாலயத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அண்ணனின் கைபிடித்து தேவாலயத்திற்கு வந்த இட்டுப் புண்ணியை ஏற இறங்கப் பார்த்தார் அருட். செராபியோன் அடிகளார்.

“வா, இட்டுப்புண்ணி, இந்த மலர்க்கிரீடம் யார் செய்தது?”

“எங்க வீட்லெ நாங்களே செஞ்சுட்டோம் சாமி”

“பச்சிலையும் பூவும் வெச்சு செய்யச் சொல்லியிருந்தேனே. காகிதப்பூ கிரீடம் வேண்டாம். சீக்கிரமா போய் பூ கிரீடம் பண்ணீட்டு வாங்க”

“இனி... இனி எங்களுக்குச் செய்ய முடியாது சாமி”

தயங்கிக் கொண்டே சொன்னான் அண்ணன்.

“அப்ப, கிரீடம் இல்லாமலே புது நன்மை வாங்கிக்க, சரியா”

தலையிலிருந்து காகித மலர் கிரீடத்தைக் கழற்றி அண்ணன் கையில் வைத்துக் கொள்ள, எந்தவித அலங்காரமும் இன்றி கிரீட மின்றி ஆலயத்துக்குள் வரிசையில் நின்றான் இட்டுப்புண்ணி. நற்கருணை நாதரை நாவில் வாங்கினான். அவன் கவலைப்பட்டு கண்ணீர் சிந்தினான் என்று நினைக்க வேண்டாம். இயல்பாகவே இருந்தான். காரணம், இயல்பாக இருப்பதை மட்டுமே அவன் விரும்பினான்... ஏனெனில், அவன் புனிதன் ஆவதற்கே பிறந்தவன், ஆடம்பரங்களைத் தனது சிறு வயதிலிருந்தே துறந்தவன்.

# 4. அன்புள்ள அக்கா... குஞ்ஞேத்தி



எப்படி, இந்த ஐந்தாம் வயதிலேயே ஆழ்ந்த இறையுணர்வும், புனிதர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கான ஆர்வமும், மரணத் திற்கு பின் ஒரு புனிதராக வேண்டுமென்ற உறுதியான மனதிடமும் அவனுக்குள் வேரூன்றியது என்ற கேள்விக்கு மிக எளிதில் விடை கிடைத்து விடும். எந்தவொரு வெற்றியாளருக்கும் அவரது வெற்றிக் குப் பின் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்லக் கேட்டிருப்போம். அது மிகவும் உண்மைதான். இட்டுப்புண்ணியின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருந்தாள். அவனது மூத்த சகோதரி குஞ்ஞேத்தி.

அவனுக்கு குஞ்ஞேத்தி ஒரு மூத்த சகோதரி மட்டுமல்ல. தனது ஆன்மீகப் பயணத்தில் தனக்கு வழிகாட்டியாகவும், உந்து சக்தி யாகவும் இருந்த குருமாதா. குஞ்ஞேத்தியின் ஆன்மீக பாடசாலை யில்தான் இட்டுப்புண்ணி தனது புனித வாழ்வின் ஆரம்பக் கல்வி யைக் கற்றுத் தெளிந்தான். தனது சகோதரியைப் பற்றி இட்டுப் புண்ணி எழுதியவை.

“என் அக்கா புனிதர்களைப்பற்றி சூழ்நிலைகளுக்கேற்ப சொல்லித்தருவாள். புனிதர்களின் மேற்கோள்கள், அவர்களது வாழ் வின் நிகழ்வுகள் போன்றவை சாதாரண உரையாடல்களில் மிகவும் இயற்கையாக ஒருங்கிணைத்து பேசுவாள். அக்கா குஞ்ஞேத்தியுடன் நான் நடத்திய உரையாடல் வேளைகளில் மிகவும் உற்சாகமுடன் இருந்தேன்”

அவள் எதையும் உபதேசமாக சொல்ல மாட்டாள், நீ அதைச் செய்ய வேண்டும் இதை செய்யக்கூடாது என்றெல்லாம் விதிமுறை களைப் போட மாட்டாள். சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுத்து இதன்படி செய் என்றெல்லாம் வழிகாட்டுதல்களைக் காட்ட மாட்டாள்.

பக்தி சம்பந்தமான விஷயங்களை சாதாரண உரையாடல் களில் இழை சேர்த்துப் பேசுவதில் குஞ்ஞேத்தியை விட்டால் வேறு ஆள் இல்லை.

கிறிஸ்துமஸிற்கு முன்பு இருபத்தைந்து நாட்கள் நோன்பு இருந்து ஆத்மீகமாக தயார்படுத்திக்கொள்ளும் பழக்கம் கேரள கத்தோலிக்கர்களுக்கு உண்டு. ஒவ்வொரு நாளும் 40 அருள் நிறைந்த மரியாள் சொல்லும் பழக்கத்தை தன் அக்காவிடமிருந்து கற்றுக் கொண்டான் இட்டுப்புண்ணி. தான் சொல்லிய ஜெபமாலை களைக் குழந்தை இயேசுவிற்காக அர்ப்பணிப்பான். மரணம் வரை அவன் தொடர்ந்த இந்த பக்தி முயற்சி தனது அக்காவின் பங்களிப்பு.

அந்தப் பருவத்தில் இட்டுப்புண்ணி பின்பற்றிய பக்தி முயற்சிகள் அனைத்திற்கும் தனது சகோதரி குஞ்ஞேத்தியை பின்பற்றியோ அல்லது அவர்களின் உரையாடல்களின் பின் விளைவோதான். அவளுடன் சிறிது நேரம் பேசினாலே நல்ல விருப்பங்களும், தீர் மானங்களும் அவனுக்குள் உண்டாகும். அந்த உரையாடல் களுக்கு அந்த அளவிற்கு ஆற்றல் இருந்தது.

வீட்டில் அவர்கள் அனைவரும் ஒன்றாகவே உணவு கொள் வார்கள். ஒருநாள் அனைவருக்கும் பரிமாறிவிட்டு தனக்குரிய தட்டுடன் வந்தாள் குஞ்ஞேத்தி. இட்டுப்புண்ணிக்கு என்ன தோன்றி யதோ தெரியவில்லை, திடீரென எழுந்து குஞ்ஞேத்தியின் தட்டை வாங்கி அதிலிருந்த கஞ்சியையும் பொரியலையும் எடுத்துச் சுவைத்தான். “சீ உப்பே இல்லை” ஒரு வாய் சுவைத்தவன் திடுக் கென தட்டைத் திரும்பக் கொடுத்தான். தனது தட்டிலிருந்து கஞ்சி யை சுவைத்தான். அளவான உப்புடன் சுவையாக இருந்தது. மெல்ல தன் அக்காவை நோக்கினான். தெய்வீகமான புன்னகையால் அவனுக்குப் பதிலளித்தாள் குஞ்ஞேத்தி.

உப்பின்றி உணவு கொள்ளும் அளவுக்கு எந்தவிதமான நோயும் இல்லை தன் சகோதரிக்கு. பிறகு ஏன் உப்பைத் தவிர்த் தாள். இட்டுப்புண்ணிக்கு அந்த புதிருக்கு உடனடியாக விடை கிடைக்கவில்லை. ஒரு புனிதனாக வேண்டும் என்று தீர்மானித் திருந்த அவனுக்கு வெகு விரைவிலேயே அதற்கான விடையும் கிடைத்தது. சிறு சிறு தியாகங்கள், ஒறுத்தல்கள் மூலமாகத்தான் தனது குறிக்கோளை எட்ட முடியும் என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவனும் உணவில் உப்பைத் தவிர்த்தான்.

இடைவிடாமல் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் கலந்து கொள்ளும் முடிவை எடுத்ததற்கும் தனது சகோதரியே காரணம். யாரையும் எதிர்பார்க்காமல் யாருக்காகவும் காத்திருக்காமல் திருப்பலியில் கலந்து கொள்ளச் செல்வாள் குஞ்ஞேத்தி. ஆலயத் திற்குச் செல்லும் வழியில் காடும் புதரும் நிறைந்த ஒரு பகுதி இருப்பதும், வழியில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதும் தடைகளாக இருந்தாலும், தினசரி திருப்பலியை ஒரு பழக்கமாக கொண்டாள் அவள்.

ஒரு நாள் மாலை வேளை குஞ்ஞேத்தி அக்கா கிணற் றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அவளருகே மெதுவாக சென்று

தனக்கு இருந்த ஒரு சந்தேகத்தைக் கேட்க துவங்கினான் இட்டூப் புண்ணி.

"ஒரு புனிதராக வேண்டும் என்று நான்ஆசைப்படுவது சரியா தப்பா?"

மனதிற்குள் எழுந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள கேட்டான் அவன்.

"அப்படி விரும்புவதிலும் ஆசைப்படுவதிலும் தவறொன்றும் இல்லை. நல்லதுதான். சிறுமலர் திரேசம்மாளும் இதுபோல ஆசைப் பட்டவள்தான்"

அவனுக்கிருந்த சந்தேகத்திற்கு விளக்கமளித்தாள் குஞ்ஞேத்தி. அன்றிலிருந்து தைரியத்துடனும், நல்ல மனசாட்சி யுடனும் அதற்காக விரும்பவும் ஜெபிக்கவும் தொடங்கினான். புனிதனாக வேண்டும் என்ற தனது கனவு இறை சிந்தனையுடன் இணைந்த ஒன்றாக மாறியது.

குழந்தையான அவனிடம் புனிதர்களைப் பற்றி நிறையப் பேசினாள் குஞ்ஞேத்தி. ஒரு நாள் அவள் பேசும்பொழுது சொன்ன ஒரு உண்மை இட்டூப்புண்ணியை உலுக்கியது.

"நமது பாரத நாட்டிலிருந்து இதுவரை புனிதர்கள் உருவாக வில்லை"

இட்டூப்புண்ணிக்கு தன் சகோதரி கூறியதை உள்வாங்க முடியவில்லை. மேலை நாட்டவருக்கு கிட்டிய அந்த பாக்கியம் நமக்கு இன்னும் கிட்டவில்லையா?

தனது குரு மாதாவான குஞ்ஞேத்தியின் பிரசன்னத்தில் இட்டூப்புண்ணி ஒரு உறுதிமொழி எடுத்துக்கொண்டான்.

"பாரத மண்ணில் ஒரு புனிதர் உயர்வார். நாட்டிற்கு பெருமை சேர்க்க ஒரு புனிதனாவதே எனது இலட்சியம்"

1938 ஜூலை மாதம் இட்டூப்புண்ணிக்கு மிகவும் வேண்டி யவளான, புனித வாழ்வுக்கு அவனது வழிகாட்டியாக இருந்த

குஞ்ஞேத்தி தனது 19 வது வயதில் காலமானாள். முதன்முதலாக தனது வாழ்வில் ஒரு வெற்றிடத்தை உணர்ந்தான். மனதுக்குள் அழுதான்.

தன் சகோதரியின் காலில் மாறாத காயமொன்று இருந்ததையும் அந்த காயத்துடன்தான் தினசரி ஒரு மைல் தூரம் நடந்து ஆலயத்திற்கு சென்றாள் என்பதையும், வழியில் இருந்த தண்ணீர் தேக்கங்களிலும் அந்தக் காலுடனேயே நடந்தாள் என்பதையும் புரிந்து கொள்ள சிறுவன் இட்டூப்புண்ணியால் முடியவில்லை.

தனக்கு முன்னால் தீப ஒளியாய் நடந்து சென்ற தனது அன்பு அக்கா காட்டிய வழியில் சிறிதும் நடைபிறழாமல் முன்னேறிச்செல்ல முடிவெடுத்தான்.

# 5. தேவசி... எனது நண்பன்



**ப**ந்தம், பாசம், உறவுகள், நட்புகள் போன்றவற்றின் பிணைப் பிலிருந்து அகன்று நபர்களை ஆத்மீக தளத்தில் சந்திக்க அந்த இளம் வயதிலேயே இட்டுப்புண்ணிக்கு சாத்தியமானது. குடும்பத் தாரையும், நண்பர்களையும் "ஆத்மீக உறவு" என்னும் புதிய பந்தத் திற்குள் கொண்டு வந்தான்.

"ஏன் தனக்கு இதயம் என்ற ஒன்று இல்லையா?" அந்தக் கேள்விக்கும் அவனிடம் பதில் இருந்தது. இதயமும் இதயம் சார்ந்த மெல்லுணர்வுகளும் தனக்கும் இருந்ததை தனது ஐந்தாம் வயதிலி ருந்தே உணர்ந்திருந்தான்.

பள்ளியில் சேர்க்கப்பட்ட முதல் வாரம். இருவருக்கு மட்டுமே உட்கார்ந்து கொள்ள வடிவமைக்கப்பட்டிருந்த இருக்கைகள். தனக்கு அருகாமையில் அமர்ந்திருந்த மாணவனிடம் நட்பு கொள்ள விரும்பினான் இட்டுப்புண்ணி. அவனை நோக்கி புன்னகைத்தான். அவனும் புன்னகையைத் திரும்பத் தந்தான். அதற்குப் பின்னர் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. வரும்போதும், போகும்போதும்

புன்னகை மட்டுந்தான். முதல் ஒரு வாரம் எந்த படிப்பும் இன்றி போன பின்பு எழுத்து வகுப்பு தொடங்கினார் ஆசிரியர் ஜான். தனது சகோதரி குஞ்ஞேத்தி பாசத்துடன் தனக்கு தந்த பென்சிலை எடுத்து ஆசை யுடன் எழுதத் தொடங்கினான் இட்டுப்புண்ணி. அன்றைய நாள் முடிந்து மகிழ்ச்சியுடன் வீடு வந்தான். தான் முதன் முதலாக எழுதி யதை அனைவருக்கும் காட்டி மகிழ்ந்தான்.

அடுத்த நாளை ஆசிரியர் எழுத்துப் பயிற்சியுடன் தொடங் கினார். மிகுந்த ஆர்வத்துடன் எழுத்துப் பலகையை எடுத்து துடைத் தான் இட்டுப்புண்ணி. பைக்குள் கைவிட்டு பென்சிலைத் தேடினான். பலமுறை தேடியும் பென்சில் கிடைக்கவில்லை. பெரும் சோகத்தில் தளர்ந்து போனவன் தலை குனிந்து உட்கார்ந்து விட்டான்.

அவனைத் தேற்றிக்கொண்டு பின்னாலிருந்து அவனது தோளை ஒரு கரம் தொட்டது. திரும்பிப் பார்த்தான். அவனுக்கு ஆறுதலளித்த கரத்தின் உடமை தேவசியா இட்டுப்புண்ணியின் கண்கள் ஈரமாய் இருப்பதைக் கண்டு சோகமானான். தன் கையிலிருந்த பென்சிலை அவனை நோக்கி நீட்டினான். ஆறுதலுடன் அவசர உதவியும் அளித்த தேவசியா அன்று முதல் அவனது பால்ய கால தோழனா னான்.

வேறொரு நாள் தனது அருகில் அமர்ந்திருந்த மாணவன் குஞ்ஞேத்தி அக்காள் அவனுக்கு தந்த பென்சிலால் எழுதுவதைப் பார்த்தான். ஆமாம், அதே பென்சில்தான். இட்டுப்புண்ணிக்கு கோபம் எல்லை மீறி வந்தது. ஆசிரியரிடம் கண்டிப்பாக சொல்ல வேண்டும்... அநீதியைக் கண்டு கை கட்டி இருப்பதா? எழ முயன்றான்...

“ஐயா...”

அழைத்தான். தனக்கு ஆறுதல் தந்த அதே கரம் மீண்டும் உதவிக்கு வந்தது. திரும்பிப் பார்த்தான் இட்டுப்புண்ணி. அமைதி யாக இரு... என்று கையால் சைகை காட்டினான். இட்டுப்புண்ணி அமைதியானான்.

“ஏப்பா... என்ன ஆச்சு?”

கண்களில் சோகம் சுமந்த இட்டுப்புண்ணியை வேறெதும் கேட்கவில்லை ஆசிரியர். அவனிடம் தனியாக விசாரித்து உண்மை யைத் தெரிந்து கொண்டவர் பென்சில் திருடு போன தையும், அதைத் தொடர்ந்த நிகழ்வுகளையும் ஒரு சம்பவமாக்க விரும்பாமல் இட்டுப்புண்ணியை இடம் மாற்றினார்... ஆமாம், தேவசியாவிற்கு அருகில் இடம் கொடுத்தார். இட்டுப்புண்ணி தேவசியா நட்பு தொடர அதுவே காரணமானது. தொடர்ந்த ஆறு ஆண்டுகளுக்கு இருவரும் ஒரே பெஞ்சில் அமர்ந்தனர்.

நினைவு தெரிந்த நாள் முதல் பலர் அவனுக்கு நண்பர்களாக இருந்துள்ளனர். ஆனால் அவன் நண்பனாக ஏற்றுக் கொண்டது தேவசியை மட்டுமே. அந்தத் தேர்வு இறை உந்துதலால் ஏற்பட்ட ஒன்று என்று அவன் மனப்பூர்வமாக நம்பினான். உத்தமமான நட்புறவு என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அந்த நட்பின் இலக்கணங்களையும், மாதிரிகளையும், தேவசியுடனான உறவிலி ருந்து கற்றுத் தெளிந்தான் அவன். தங்களது நட்புக்கு ஒரு நாளும் முறிவு ஏற்படக்கூடாது என்று இறைவனை வேண்டினான். ஒரு கணம் கூட அந்த அன்பிலிருந்து அகன்று போனதில்லை.

தேவசியாவை பள்ளியில் காண்பதற்கு முன்னரே பலமுறை கண்டிருக்கிறான் இட்டுப்புண்ணி. ஆனால் ஒருமுறைகூட பேசிய தில்லை. பாவறட்டி ஆசிரமத்தின் வளாகத்தில் அவனை பலமுறை சந்தித்திருக்கிறான். இட்டுப்புண்ணியைப்போலவே வளர்க்கப்பட்ட ஒருவன் தான் தேவசியா என்பதை புரிந்திருக்கிறான். இட்டுப் புண்ணியின் குடும்பத்திற்கும், தேவசியாவின் குடும்பத்துக்கும் ஒற்றுமைகள் ஏராளமாக இருக்க வேண்டும் என்று யூகித்தான். தேவாலயத்துக்குள் அவன் நடந்து கொள்ளும் முறையும் பிறரிடம் பழகும் தன்மையும் பேசும் விதங்களும் தனக்கு ஏற்புடையதாக எண்ணினான். அவனது ஊர் எது, குடும்பம் எது என்றெல்லாம்

தெரியாவிட்டாலும், தனது குடும்பத்துக்கும் அவனது குடும்பத் திற்கும் நிறைய ஒற்றுமைகள் இருக்க வேண்டும் என்று நம்பினான்.

நண்பர்கள் இணைவதையும், மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப் பதையும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதையும் கண்டிருக் கிறான். அவர்கள் உறவில் விரிசல் விழுவதையும், பிரிந்து செல்வதையும், ஒருவருக்கொருவர் எதிரிகளாக மாறுவதையும்கூட கண்டிருக்கிறான். ஆனால் இட்டுப்புண்ணி தேவசியா நட்பு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்த நட்பு. ஒருமுறைகூட இன்னா சொல்லோ, கோபமோ, வெறுப்போ வெளிப்பட்டதில்லை. வெளிப்படையாக அவர்கள் தங்கள் நட்பை காட்டிக்கொண்டதில்லை. ஒன்றாக இருப்பது, ஒன்றாக விளையாடுவது இதுவே அவர்களது நட்பின் வெளிப்பாடு. அவர்களது நகைச்சுவை உரையாடல்கள் மௌனம் மட்டுமே. ஐந்து நிமிட இடைவெளியில் ஒரு வாய்ப்பு கிடைத்தாலும் ஓடிப்போய் பந்து விளையாடுவார்கள்.

நான்காம் தரத்தில் (Fourth Form) படித்துக் கொண்டிருந்தபோது இட்டுப்புண்ணிக்கு பெரிய அளவில் உடல் பலவீனம் ஏற்பட்டது. தனது ஞாபக சக்தியை இழந்து விட்டது போல உணர்ந்தான். படிப்பை இடையில் நிறுத்தவேண்டி வருமோ என அச்சப்பட்டான். மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டான். தனக்கு என்ன நோய் என்பதை அறியாமல் இருந்ததால் யாரிடமும் தனது பிரச்சனைகளை சொல்லவுமில்லை. தேர்வும் நெருங்கி வந்தது. நான்காம் தரம் புதிய பாடத்திட்டமாக இருந்ததால் அனைவரும் பயத்துடன் அதிக கவனம் செலுத்தி படித்து வந்தனர்.

இட்டுப்புண்ணிக்கு ஏற்பட்ட குறைபாடு தேவசியையும் தளர்த்தியது. தனது நண்பனின் உதவிக்கு வந்தான் தேவசி. அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு பாடங்களை விளங்க வைத்தான். இரவு பகல் பாராமல் இட்டுப்புண்ணிக்கு உதவினான்.

ஐந்தாம் தரம் (Fifth Form) வந்தபோது நண்பர்கள் இருவரும்

பிரிந்தாக வேண்டிய சூழ்நிலை. வேறு வேறு பிரிவுகளுக்கு மாற்றப் பட்டார்கள். இட்டூப்புண்ணி குருத்துவ மாணவனாக தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தான். குருத்துவ மாணவர்களுடன் கூடுதலாக பழக வேண்டியிருந்தது.

இட்டூப்புண்ணிக்கு தனது நண்பர் தேவசியாவிடம் மிகப் பெரிய அன்பு இருந்தது. ஆனால் அதை வெளிக்காட்ட அவனது தனிப்பட்ட குணம் அவனை அனுமதிக்கவில்லை. அன்பையும், அக்கறை யையும் இறைமகன் இயேசுவின் திரு இருதயத்திற்குச் சமர்ப்பித் தான்.



# 6. அன்னையின் உறுதி

**இ**ட்டூப்புண்ணியின் தாயார் மரியம். அவர் திருச்சூர் பாலயூர் பங்கைச் சேர்ந்தவர். பாலயூர் என்ற இடப்பெயர் புனித தோமையாரின் பாரத வருகை தொடர்பாகவும், பழமையான தேவாலயம் என்ற பெயரிலும், மூதாதையர் வேதத்தை ஏற்றுக் கொண்ட சரித்திர நிகழ்வுகளிலும் அடிக்கடி பேசப்படும் ஊர். விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றிய குடும்பத்தில் பிறந்தவர். பாவறட்டிக்கு அவள் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். அவள் பிறந்து வளர்ந்த சூழலுக்கு மாறாக புகுந்த வீட்டில் பொருளாதார நிலை சற்று சரிந்தே இருந்தது. ஆறு குழந்தைகளைப் பெற்றாலும் விசுவாசத்திற்குட்பட்டு அவர்களை வளர்க்கவும் பக்குவமான இறை உணர்வுடன் அவர்களை பேணவும் அவள் கவனம் செலுத்தினாள். அன்பும் விசுவாசமும் கல்வியும் கலந்து அவர்களுக்குத் தாய் பாலூட்டினாள்.

திரு இருதய பக்தியில் மறியத்திற்கு தனி ஈடுபாடு இருந்தது. தனது ஈடுபாட்டைத் தனது குடும்பம் முழுவதற்கும் பரப்பினாள்.

இட்டுப்புண்ணி பிறக்கும் முன்னரே 1919 ஜுலை மாதம் 4ம் நாள் அவனது ஒலக்கேங்கல் குடும்பம் திரு இருதய ஆண்டவரின் பாதுகாப்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருஇருதயமே அந்தக் குடும்பத்தின் வாழ்க்கை முறைகளுக்கு கட்டுப்பாட்டு மையமானது.

மறியத்துக்கு தனது பிள்ளைகள் ஆத்மீகமாக எப்படி வளர்ந்து வரவேண்டும், எதிர் காலத்தில் அவர்கள் யாராக வேண்டும் என்பதைப் பற்றிய தெளிவான பார்வை இருந்தது. வறுமையான சூழ்நிலைகளில் வாழும் குடும்பங்களில் தங்கள் பிள்ளைகள் பொருளாதார நிலையில் சிறந்து வரவேண்டும்; தங்களுக்கு ஏற்பட்ட நிலை பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்றெல்லாம் எண்ணிக் கொண்டு அவர்களை பொருளீட்டும் படிப்புகளில் கவனம் செலுத்தச் செய்வர். ஆனால் மறியம் தனது பிள்ளைகளை இறைவனுக்கு உகந்தவர்களாகவும் இதயத்தில் அன்புள்ளவர்களுமாகவுமே வளர்த்தாள். தனது பிள்ளைகள் இறையழைத்தலுக்கு செவிமடுத் தபோது எவ்வித தயக்கமுமின்றி அவர்கள் விரும்பிய பாதையில் செல்ல அவர்களுக்கு துணைநின்றாள். அவர்கள் தேர்தெடுத்த அழைத்தலை இன்னும் செறிவூட்டத் தேவையான அனைத்து வழிகளிலும் உதவினாள். தனது மூத்த சகோதரனும், குஞ்ஞேத்தி அக்காவும், இளைய சகோதரியும் துறவற வாழ்க்கைப் பயணத்துக் கான முயற்சியைத் தொடங்கினர். இளைய சகோதரி மேரி மார்சின் துறவறத்தில் இணைந்தாள்.

இட்டுப்புண்ணிக்கு 6 வயதிருக்கும்பொழுதே பீடச் சிறுவனாக (திருப்பலியில் உதவும் சிறுவன்) பயிற்சியெடுத்துக் கொள்ள அம்மா அவனை வற்புறுத்தி வந்தாள். பீடச்சிறுவன் என்பது சிறுவர்களுக்கு இளம் வயதிலேயே தலைமையேற்கும் பயிற்சியை அளிக்கும் ஒரு வாய்ப்பு. இளமையிலேயே அளிக்கப்படும் இந்தப் பயிற்சி கத்தோ லிக்க சபையில் மட்டும்தான் வழங்கப்படுகிறது என்பதை அவனது தாய் உணர்ந்திருந்தாள். தனது மகனும் அந்தப் பயிற்சியை

இளமையிலேயே பெற்றுக்கொள்ளுதல் அவனது ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் என்பதையும் அறிந்திருந்தாள். ஆனால், தடையின்றி பீடச்சிறுவனாக பயிற்சி எடுத்துக்கொள்ள இட்டுப் புண்ணியால் இயலவில்லை.

பல ஜெபங்களை மனப்பாடமாகப் படித்து தினந்தோறும் தவறாமல் அவற்றைச் சொல்ல வேண்டும் என்றும் அவனது தாய் வற்புறுத்துவாள். ஏற்கனவே எழுதப்பட்ட ஜெபங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் அந்த முறையை 'ஜெபித்தல்' என்று சொல்ல அவனால் இயலவில்லை. அதற்கு வேறுகாரணங்களும் இருந்தன. மனப்பாடம் செய்தல் என்பது தனக்கே உரித்தான மறதியால் வெற்றிகரமாக செயல்படுத்த இயலவில்லை. அதுமட்டுமல்ல அத்தகைய ஜெபித்தலை அவன் விரும்பவுமில்லை. மாறாக, உள்ளத்திலிருந்து எழும் ஜெபங்களே சிறந்தவை எனவும் கொண்டிருந்தான். தாயார் சொன்ன பக்தி முறையில் தன்னால் வளர முடியவில்லையே என்றும் வருந்துவான். வயது வளரவளர அவன் மோசமாகி வருவதாக தாயார் அவனிடம் கூறியுமிருக்கிறாள்.

ஒருமுறை தாயார் அவனை அழைத்து,

"உன் கழுத்தில் தொங்கும் தங்கச் சங்கிலியை கழற்ற முடியாதபடி விளக்கிச் சேர்க்கப் போகிறோம்" என்றார்.

இட்டுப்புண்ணிக்கு எதுவுமே புரியவில்லை. மற்றவர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் நகை அணிவது போன்ற பழக்கங்கள் அவனுக்கு ஏற்புடையவையாக இருக்கவில்லை. நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனது கழுத்தில் கிடக்கும் அந்த தங்கச் சங்கிலியை எப்படியாவது தனது உடலிலிருந்து அகற்ற வேண்டும் என்றிருக்கும்போது துண்டாக்கவே முடியாதபடி அதை விளக்கிச் சேர்க்கப் போகிறார்களா? என்ன கொடுமை இது!

"அம்மா இந்த நகையணியும் பழக்கம் எனக்கு அருவருப்பாக இருக்கிறது. மிகவும் செயற்கையாகத் தோன்றுகிறது. இனிமேல்

எனக்கு இது வேண்டாம். தயவு செய்து இதனை வாங்கிக் கொள்ளுங்கள்”

என்று சொன்னவன் தன் கழுத்திலிருந்த நகையைக் கழற்றிக் கொடுத்தான்.

“மகனே, குருத்துவப்படிப்புக்கு போகவேண்டும் என்று அக்கா விடம் சொன்னாயே, நீ சபையில் சேரப் புறப்படும்பொழுது ஏற்படும் பொருளாதாரத் தேவையைச் சந்திக்கவே இந்தச் சங்கிலி. அது உன்னிடமே இருக்கட்டும். அந்த சமயத்தில் நமது பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்று சொல்லமுடியாது. அந்தக் காரணத் துக்காக உனது லட்சியப் பயணம் தடைபட்டு விடக்கூடாது. ஆகவே, தற்சமயம் இது உன் கழுத்திலேயே கிடக்கட்டும்” என்றார்.

சபையில் சேர தனக்கிருந்த தீவிரமான விருப்பத்தைக் கருதியும், வேறு பொருளாதார வழிகள் தென்படாது இருந்ததாலும், அனைத்திற்கும் மேலாக தாயின் சொல்லில் தனக்கிருந்த உறுதியான நம்பிக்கை மூலமும் அந்த நகையைப் பிணைப் பொருளாக கருதி கழுத்தில் சுமந்தான். சபை பிரவேசத்தை ஞாபகப் படுத்தும் அடையாளமாக, விருப்பமின்றியும் தன்னுடனேயே வைத்துக் கொண்டான். தன் இறையழைத்தலுக்கு உதவிய தாயாரின் உறுதியை எண்ணி வியந்தான்.

மாலை நேர குடும்ப ஜெபத்திற்குப் பின் வீட்டார் அனைவரும் தனியாக கொஞ்ச நேரம் ஜெபிக்கும் வழக்கம் அவனது வீட்டில் இருந்தது. அந்தத் தனிமை நேர ஜெபத்தில் என்னென்ன ஜெபங்களைச் சொல்லவேண்டும் என்றும் அம்மாவே அவர்களுக்கு வழிகாட்டுவாள். வயது முதிர்ச்சிக்கேற்ப ஒவ்வொருவரும் சொல்ல வேண்டிய ஜெபங்களின் எண்ணிக்கையும் நீட்டத்தையும் நிர்ணயிப் பாள். அவனது அண்ணனும் சகோதரிகளும் ஜெபங்களின் எண்ணிக் கையை அதிகரித்து நீண்ட நேரம் ஜெபிக்கும்போது, இட்டுப்புண்ணி யால் மட்டும் அவ்வாறு ஜெபிக்க இயலவில்லை. உரக்க ஜெபிக்

காமல் சிறிய சத்தத்தோடு ஜெபிக்கும் இட்டுப்புண்ணியை பலமுறை கோபித்திருக்கிறாள் அவனது தாய். வேறுவழியின்றி அம்மாவின் விமர்சனங்களைச் சகித்துக் கொண்டான். உரத்த குரலில் மனப் பாடம் செய்த ஜெபங்களை ஒப்புவித்தலில் தனக்கு தேர்ச்சி மதிப் பெண் கிடைக்கவில்லை என்றாலும் இறைவனிடம் மனம்விட்டுப் பேசுவதிலும் இறைவனோடு ஒன்றாய் இருந்து நேரத்தைச் செலவிடவும் தன்னால் முடிந்தது குறித்து மகிழ்வான். தனது தாயார் கூறியதை அப்படியே நடைமுறைப்படுத்தாமல் போனது பற்றிய தனது குற்ற உணர்வை இறைவனுக்கு சமர்ப்பித்தான். தனது மனப்போராட்டத்தை உணர்ந்துகொள்ள இயலாத அவனது தாயார் பெரிதும் கவலைப்பட்டிருக்கிறார். அதற்காக தனது ஜெப முறையை மாற்றவும் அவனால் முடியவில்லை. தனது வாழ்நாள் முழுவதும் அம்முறையே பின்பற்றினான்.

தந்தையையும் தாயையும் பிரிந்து துறவறம் மேற்கொள்ள தனது வீட்டிலிருந்து செமினரிக்குப் புறப்படும் நேரம் வரை ஆத்மீய வாழ்வு மூலம் தனது தாயார் மனதைத் திருப்திப் படுத்த அவனால் இயலவில்லை. ஆனால் புறப்படும் அந்த நாட்கள் நெருங்க நெருங்க பிரிவின் துயரத்தாலும் அன்பின் பெருக்காலும் அவனது குறைகளை மறந்து "அவனைப் போல பக்தி ஈடுபாடுள்ளவர் வீட்டில் வேறு யாருமில்லை" என்னும் தொனிபட பேச ஆரம்பித்தாள்.

தனது தாய்க்கு மிகுந்த கல்வியறிவோ உலக அனுபவமோ, தத்துவ இறையியல் ஞானமோ எதுவும் இல்லை. இருப்பினும் வீட்டை நடத்திச் சென்றது அவர்தான். பிள்ளைகளை வழிநடத்துவதிலும், ஜெப முயற்சிகளைக் கற்றுத்தருவதிலும், இக்கட்டான சூழல்களில் தனது கணவருக்குத் தேவையான ஆத்தும பலத்தைக் கொடுத் தலிலும் உறுதியாக இருந்தாள். நடக்கமுடியாமல் நீண்ட நாட்களாக படுக்கையில் இருந்தபோதும் தனது தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்த பல்லக்கில் அமர்ந்து ஆலயம் செல்வாள். திவ்ய நற்கருணை

உட்கொள்ள நாட்கணக்காக தன்னையே தயார் செய்து கொள் வாள். அன்னையின் அந்த உறுதி இட்டுப்புண்ணிக்கு பலமளித்தது.

வைராக்கியமான ஒரு துறவற வாழ்க்கைக்கு தனக்கு உறு துணையாய், மாதிரியாய் இருந்த அந்த வீரத்தாய் 1950 ஜூன் 9 அன்று மறைந்தாள். இட்டுப்புண்ணி ஒரு துறவற குருவாகி அவரிடம் திவ்ய நற்கருணை பெற்றபின்னரே...

# 7. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை



இட்டூப்புண்ணியின் குடும்பம் அவன் பிறப்பதற்கு முன்பே தூய இருதய ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. இந்த அர்ப்பணம் அவனது தாயார் வீட்டு பங்களிப்பு. அது ஒவ்வொரு முதல் வெள்ளிக்கிழமைகளிலும் மிகவும் ஆர்வமுடன் புதுப்பிக்கப்பட்டு வந்தது. பிற ஜெபங்களை குஞ்ஞேத்தியும், அம்மாவும் சொன்னாலும் அர்ப்பண ஜெபத்தை அப்பாவே சொல்லுவார். அந்த அர்ப்பண ஜெபத்தை சொல்லும்போது அப்பாவை பார்ப்பதே பக்திப் பெருக்காக இருக்கும். பக்தியில் உணர்ச்சி வசப்பட்டுதான் அந்த அர்ப்பணம் அவர் நடத்துவார். நீண்ட பயணம் செய்ய முற்படும்போது அல்லது முக்கியமான விஷயமாக புறப்படும்போது திரு இருதய ஆண்டவரின் அர்ப்பணம் அவர்கள் குடும்பமே ஒன்று சேர்ந்து சொல்வார்கள்.

பயணம் முடிந்து திரும்ப வரும்போது தூய இருதய ஆண்டவருக்கு நன்றி சொல்ல அப்பா மறந்ததில்லை. நன்றி சொல்லக் கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் அவர் பயன்படுத்தினார்.

அந்த நன்றி கூறும் பழக்கம் தனது மக்களிடமும் வளர வேண்டுமென அடிக்கடி கூறுவார். ஒருமுறை பயணம் முடிந்து வீடு திரும்பிய குடும்பம் களைப்பு தீர உட்கார்ந்தபோது அப்பா கேட்டார்.

“உங்களில் இறைவனுக்கு நன்றி கூறியது யார்?”

“நான் நன்றி கூறினேன்”

உற்சாகத்துடன் கூறிய இட்டுப்புண்ணியைப் புன்னகையுடன் தழுவி முத்தமிட்டார் அப்பா. அப்பாவிடமிருந்து இட்டுப்புண்ணி பயின்றதும் கடைசிக் காலம் வரை கடைப்பிடித்ததுமான முக்கிய பாடங்களில் ஒன்று இது.

தங்களுடன் பழகும் பிற குடும்பங்களில் திரு இருதய ஆண்டவருக்கு அர்ப்பணம் நடத்தும் பழக்கத்தைக் கொண்டுவரவும் அப்பா முயன்றார். வீட்டுக்கு வரும் உறவினர் மற்றும் நண்பர்களுக்குத் திருஇருதய அர்ப்பணத்தால் வரும் வரப்பிரசாதங்களை தனது அனுபவத்திலிருந்து விளக்குவார்.

பிற்காலங்களில் வீட்டில் நடைபெற்று வந்த மூன்று வேளை ஜெபத்திற்கு வேகம் குறைந்திருக்கிறது. மாலை நேரத்து ஜெப மாலை கூட முழு ஈடுபாட்டுடன் நடைபெறாத நாட்கள். ஆனால், திரு இருதய ஆண்டவருக்கான அர்ப்பணம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தடையின்றி தொடர்ந்தது. அப்பா அம்மாவின் காலம் வரை அந்த அர்ப்பணம் ஆர்வமுடன் தொடர்ந்தது. ஒவ்வொரு முதல் வெள்ளிக்கிழமையும் தவறாமல் ஆலயம் செல்லவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும், நன்மை பெற்றுக் கொள்ளவும் குடும்பத்தாரை ஞாபகப்படுத்தியது அப்பாவின் வழி நடத்தல்.

குடும்பத்தில் ஆத்மீகச் சூழல் உருவாக்கப்பட்டதில் தாய் தந்தை இருவரும் மிகுந்த கவனம் செலுத்தியிருந்தாலும் தனது ஆத்மீக வளர்ச்சியில் அப்பாவின் தாக்கமே முன்னிட்டு நிற்கிறது என்பதை இட்டுப்புண்ணி நினைவுகூருகிறான்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு சிந்தனைக்காரனாகவே இருந்தான் இட்டுப்புண்ணி. இதயத்தை விட புத்திதான் அவனை இட்டுச்சென்றது. ஐந்து ஆறு வயது பருவத்தில் பயப்படுத்தும் கனாக்கள் கண்டு பயந்து உறக்கம் இழந்திருக்கும்போது அம்மா விடமிருந்து எழுந்து அப்பாவின் கட்டில் நோக்கிச் செல்வான். தூங்கிக் கொண்டிருக்கும் அப்பாவின் ரோமம் நிறைந்த பலமான கரங்களை பற்றிக்கொண்டால் போதும் பிறகு ஒரு பயமும் இன்றி நிம்மதியாக உறங்கிவிடுவான் அவன். அதற்கு அவன் கண்ட நியாயம் அம்மாவிற்கு சக்தியில்லை; அப்பா பலமானவர் என்பதே. அதுபோலவே அம்மாவை விட அப்பாவுக்கு அதிக அறிவுள்ளது என்றும் அவன் நம்பினான். இக்காரணங்களால் அப்பாதான் அவனது கதாநாயகனாக இருந்தார்.

பல காரியங்களிலும் தான் அப்பாவைப் போல இருப்பதாக புரிந்து கொண்டான். அவ்வாறு இருப்பதில் மன நிறைவும் கொண்டி ருந்தான். தனது ஜெப வாழ்விலும் அப்பாவின் தாக்கம் இருப்பதை உணர்ந்திருந்தான்.

அவனது இளமைக்காலம் வரை அவனது குடும்பம் மிகுந்த வறுமையை அனுபவித்தது. சில மாதங்களில் நாட்கள் கடந்து போனதே இறைவனின் கருணையில்தான். பலவேளையிலும் உணவே தாமதமாகத்தான் கிடைத்தது. ஆனால் அம்மாவின் திறமையால் பெரிய பிரச்சினையின்றி நாட்கள் உருண்டோடின. குடும்பத்தின் இந்நிலை வெளியிலிருப்பவர்களுக்கு அதிகம் தெரியாமலே பார்த்துக்கொண்டனர். இதுமட்டுமின்றி கடன் திரும்பச் செலுத்த வேண்டியவர்கள் பணத்தைக் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்தனர். சில தொந்தரவுகள் நீதிமன்றம் வரை சென்றது, தீர்ப்பானது, ஜப்தி, வாரண்டு என பரிணமித்தது. கடன்காரர்களை தவிர்க்க அப்பாவுக்கு பகல் வீட்டுக்கு வரமுடியாத சூழ்நிலைகள்,

வீட்டை விட்டு விலகி இருந்த சந்தர்ப்பங்கள் கூட உண்டாயிருக் கிறது.

இதுபோன்ற இருண்டகாலம் ஓரளவுக்கு ஓய்ந்த பின் ஒருநாள் அப்பா கூறினார்.

"நான் பலருக்காகவும் அனேக காரியங்களுக்காகவும் ஜெபித் திருக்கிறேன், ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு முறை கூட எனது பொருளாதாரம் மேம்பட ஜெபித்ததில்லை."

டன்ஸ்டன் அடிகளாருக்கு இதுவும் ஒரு பாடமாக இருந்தது. சொந்த தேவைகளுக்காக ஒருபோதும் ஜெபிக்கமாட்டார். குடும்பத் துக்காகவும் குடும்பத்தினருக்காகவும் ஜெபிக்கமாட்டார். பெற்றோ ருக்காகவும் அவர்களது தேவைகளுக்காகவும் ஜெபிக்காமல் அவர்களை திரு இருதயத்தில் சமர்ப்பித்து ஜெபிப்பார். ஒரு துறவி யாருக்காக ஜெபிக்கலாம்? யாருக்காக ஜெபிக்க வேண்டியதில்லை போன்ற கேள்விகளுக்கு தனது வாழ்வு மூலம் பதில் அளித்தார்.

புனித சிறுமலர் திரேசம்மாவின் சரித்திரம் இட்டுப்புண்ணிக்கு மிகவும் பழக்கமான ஒன்று. புனித தெரசம்மாளைப் பின்பற்றி காணிக் கை அன்னைக்கு சமர்ப்பித்துள்ள ஒரு ஜெபத்தைச் சொல்ல அவனது அம்மா அவனை நிர்ப்பந்திப்பாள் அவனும் அம்மாவுக்காக அதனைச் சொல்லிவந்தான். புத்தகத்திலுள்ள ஜெபங்களைப் படிப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், ஒருநாள் காலை நேரத்தில் அப்பாவின் தனிமையான சொந்த ஜெபத்தைக் கேட்க நேர்ந்தது. புத்தகம் பார்க்காமல் அவர் நடத்திய ஜெபத்தில் அமலோற்பவ அன்னையின் சமர்ப்பண ஜெபத்தையும் கேட்டான். அதிலிருந்து பல ஆண்டுகளாக அப்பா அந்த ஜெபத்தைச் சொல்வதாக அனுமானித் தான். அன்று முதல் அந்த ஜெபத்தைச் சொல்ல அவனுக்கு எளிதாக இருந்தது. அப்பா தனது ஜெப வாழ்வின் முன்னோடியானதை நினைவு கூறுகிறார் அடிகளார்.

புனிதர் ஆவதற்கென்று புறப்பட்ட இட்டுப்புண்ணியை கரம் பிடித்து வழிநடத்தி அவரை டன்ஸ்டன் அடிகளார் ஆக்கிய அவரது அப்பா... தனது மகனின் சிறு சிறு பக்தி முயற்சிகளுக்கும் அடிப்படை உந்து சக்தியாக இருந்த அந்த பலத்த கரங்களின் உரிமையாளர்...

டன்ஸ்டன் அடிகளாரின் ஆத்தும பயணத்தில் வழிகாட்டி... ஒலக்கேங்கல் பவுலோஸ்1943 நவம்பர் மாதம் மறைந்தார்.

# 8. இறையழைத்தலுக்கு அர்ப்பணம்



**த**னது வீட்டில் நிலவிய தெய்வீகமான சூழலும் தனது மூத்த சகோதரி குஞ்ஞேத்தியின் பொன்மொழிகளும் முன்மாதிரியும் இட்டுப்புண்ணியைப் புனித வாழ்வின் வழியே இட்டுச்சென்றது. புனிதத்துவத்தின் நிறைவை நோக்கிய தனது பயண வழியென்பது துறவற வாழ்வின் சமர்ப்பணம் எனும் குறிக்கோள் மூலமே சாத் தியமாகும் என்பதை அவன் புரிந்து கொண்டான். குடும்ப சூழ்நிலை யும், நபர்களும், அனுதின சம்பவங்களும், அனுபவங்களும் அந்தப் புரிதலை நிரந்தரமாக தொட்டு உணர்த்தின. ஆழமான இறை உணர்வுடன், திடமான நம்பிக்கையுடன் அவனது ஆளுமையை நிறைவாக்கி அந்தப் புரிதல் ஆக்கம் பெற்றது. இறை அழைத்தலின் முழுமையை நோக்கி இட்டுப்புண்ணி பயணிக்கலானான்.

ஒரு புனிதன் ஆவதற்கான ஆசை அவனது உள்ளத்தில் வளர்ந்துகொண்டே இருந்தது. சகோதரி குஞ்ஞேத்தியின் பேச்சி லிருந்து படிப்படியாக அவன் ஒன்றைப் புரிந்து கொண்டான். அவள்

அவனுக்கு அறிமுகப்படுத்திய புனிதர்கள் பலரும் துறவற குரு மார்களும் கன்னியர்களுமாகவே இருந்தனர். இதிலிருந்து அவன் மனதளவில் முடிவுக்கு வந்தான். "எனக்கும் ஒரு துறவற குருவாக வேண்டும்". ஒரு குரு ஆகவேண்டும் என்ற விருப்பம் அவனுக்கு கிட்டதட்ட ஏழு வயதிருக்கும்போது வந்தது. ஆனால், அவ்விருப்பம் ஒரு புனிதன் ஆகவேண்டும் என்ற விருப்பத்திற்குப் பிறகே தோன்றி யிருக்கிறது.

ஒரு துறவறகுரு ஆவது எதற்காக என்று யாராவது கேட்டால் எப்படி பதில் சொல்ல வேண்டும் என்று தனது சகோதரி சொல்லித் தந்திருக்கிறாள்.

"ஒரு புனிதன் ஆவதற்கும் அதுமூலம் பிறரது ஆத்துமாக்களை ஈடேற்றவுமே ஒரு துறவற குருவாகிறேன்" என்ற தெளிவைப் பெற்றி ருந்தான்.

நல்ல இறையழைத்தல்கள் உருவெடுப்பது ஆத்மீகச் சூழல் உள்ள குடும்பங்களிலிருந்தே. நல்ல குடும்பங்களை உருவாக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளில் பரிசுத்த ஆவியின் இயக்கத்திற்கு இணக்கமான பிரதிபலிப்புகளுக்கு களம் அமைக்கின்றனர். தங்க ளது பிள்ளைகளின் மனங்களில் இறைசார் கற்பனைகள் மலர்ந்து மணம் பரப்பச் சாதகமான சூழ்நிலைகளை அமைப்பது அவர்களது இயற்கையான மனநிலைகளும் வாழ்க்கை முறைகளுமே. தனது பெற்றோரின் வார்த்தைகளும் செயல்பாடுகளும் இறை அழைத் தலுக்கு தன்னை எப்படி தயார் செய்தது என்பதை இட்டுப்புண்ணியே விளக்குகிறான்.

"எனது பெற்றோர்கள் குருவானவர்களைப் பற்றியும், கன்னியர் களைப் பற்றியும் எப்பொழுதும் ஆதரவுடனும் அன்புடனும் மட்டுமே பேசிக்கொள்வார்கள். தாங்கமுடியாத வறுமை குடும்பத்தில் நீண்ட காலம் தொடர்ந்த வேளையிலும் குருமார்களுக்கு உதவி செய்வ திலும் அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து உபசரிப்பதிலும் என்

பார்வையில் சற்று அதிகமான அக்கறை காட்டியிருப்பதாகவே நினைக்கிறேன். நமது நிஜ நிலைக்கேற்ற உபசரிப்பு போதுமே, சாப்பிடவும் குடிக்கவுமா அவர்கள் வருகிறார்கள். நம்மால் இயன்ற அளவு நமது அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்தினாலே போதும் என்றும் நான் சொல்வதுண்டு."

ஒருசமயம் இட்டூப்புண்ணியின் குடும்பத்தார் குருசுமலைக்கு (மலையாட்டூர்) புனித பயணம் மேற்கொண்டனர். பெரியாறு ஆற்றின் வழியே படகு மூலம் சென்றவர்கள் ஆலுவா மணல்வெளியில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டனர். ஓய்வுக்குப் பிறகு மீண்டும் புறப் பட்டனர். வெகுதூரம் சென்ற பிறகே சிறுவன் இட்டூப்புண்ணி அவர்களுடன் இல்லையென்று தெரிந்தது. அனைவரும் திகைத்துப் போயினர். இனி என்ன செய்வது? வந்த வழி முழுதும் திரும்ப துடுப் பிட்டு அவர்கள் ஓய்வெடுத்த மணற்பரப்பிற்கே வந்தனர்.

"அதோ, அங்கே உட்கார்ந்திருக்கிறான் நமது இட்டுப் புண்ணி"

அலறினான் இட்டூப்புணியின் அண்ணன் ஜோசப். சற்றும் கவலையின்றி ஒரு தோணியின் நிழலில் உட்கார்ந்திருந்த இட்டூப் புண்ணியைக் கட்டித்தழுவினான் அண்ணன்.

"நாங்கள் திரும்ப வரவில்லை என்றால், நீ என்ன செய்திருப் பாய்?"

மகிழ்ச்சியும், கோபமும் கலந்த குரலில் கேட்டான் ஜோசப்.

"நான் அருகாமையில் துறவற ஆசிரமம் எங்கே என்று தேடிக் கண்டுபிடித்து அதில் சேர்ந்துகொள்வேன்."

எந்த விதமான யோசனையும் செய்யாமல் உடன் பதிலளித் தான் இட்டூப்புண்ணி.

திவ்ய நற்கருணை உட்கொண்டவுடன் நடத்தும் நன்றி செபத் தில் முக்கியபொருளாக அவன் ஏற்றெடுத்தது,

"ஆண்டவரே, என்னை ஒரு புனிதன் ஆக்கவேண்டுமென இறைஞ் சுகிறேன். என்னை ஒரு துறவியும் குருவானவருமாக பார்த்து

நிறைவடையும் பேற்றை என் தாய்க்கு அருளும். என்னையும் என் சகோதரி குஞ்ஞேத்தியையும் எனது தோழனான தேவசியையும் நண்பர்களான பாலையும் வர்க்கீஸையும் துறவற சன்னியாச வாழ்வுக்கு ஈர்த்துக்கொள்ளும்”

என்று வேண்டிக்கொள்வான்.

துறவற குருவாக வேண்டுமென்ற தனது விருப்பத்தை இரகசியமாகவே பாதுகாத்தான் இட்டுப்புண்ணி. பலரும் தன்னிடத்தில் வெளிப்படையாகவே கேட்டபோதும் இது குறித்து தெளிவான ஒரு பதிலை யாருக்கும் அளிக்கவில்லை.

“அதற்கான காலம் ஆகவில்லை, யோசித்துக் கொண்டிருக்கிறேன்”

போன்ற தெளிவற்ற பதில்களை அளித்தான். வெளிப் படையாக யாரிடமும் சொல்லவில்லை. தன்னிடம் கேட்ட குருமார்களுக்கும் பிடி கொடுக்கவில்லை. காரணம், பிறரிடம் டமாரமடித்து சொல்ல வேண்டிய விஷயமல்ல இது என்றும் ஒருவகையிலும் தனக்கும் தனது இறை அழைத்தலுக்கும் அது எந்த பயனும் செய்யாது என்றும் மாறாக, எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்றும் கருதினான்.

கேட்பவர்கள் பலரும் ஒரு ஆர்வத்தின் பேரில்தான் கேட்கிறார்கள். அவர்களிமிடமிருந்து எந்த நன்மையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. சில குருமார்கள் கூட அதே ரகம் தான் என்றும் அவன் உணர்ந்திருந்தான். இறைவனின் இரகசியத்தை, அது நிறைவேறும்வரை பயனற்ற விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும் பொருளாக்க அவன் விரும்பவில்லை.

அவனுக்கு மிகவும் நெருக்கமான நண்பன் தேவசியிடம்கூட இதனை அவன் சொல்லவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகே கூறினான். அதுவும் அதனை பிறர் அறிய நேர்ந்து வெளிப்படையான பிறகு.

துறவற சமர்ப்பணம் என்னும் அழைப்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சக்திபெற்று வந்தபொழுதும் தனக்கே உரித்தான பலவீனங்களைக் குறித்த உள்ளுணர்வும் இட்டுப்புண்ணியை நிரந்தமாக அலட்டியது. அவற்றை வெற்றி கொள்ள தனக்குத் தானே கடினமான போராட்டம் அவனுக்கு அவசியமானது. இறை அழைத்தல் குறித்த எதிர்பார்ப்புகள்... அவற்றிற்கு தடையாய் நிற்கும் தனது பலவீனங்கள்... அவற்றைப் போராடி வெல்ல வேண்டும் என்ற மன உறுதிப்பாடு அவனுக்குள் வலுப்பெற்றது.

துறவற வாழ்க்கைக்கே உரித்தான பல நற்பண்புகள் அவனுக்குள் இல்லை. ஆனால் அதற்கு மாற்றாக வேறு சில நற் குணங்கள் தனக்கு உண்டு என்பதை எக்காலமும் நம்பினான். பிறர் பார்வைக்கு முடிவுகளை நிறைவேற்றும் உறுதிப்பாடு உள்ளவனாக அவன் இருக்கமாட்டான். பிரார்த்தனைகளிலும், ஜெபங்களிலும் சோம்பேறித்தனம் இருந்தது. நல்ல நல்ல தீர்மானங்களை எடுக் கவும் திட்டமிடவும் செய்வான். ஆனால், முழுமையாக அதை நடை முறைப்படுத்த மாட்டான். அவனது வாழ்க்கை முறை அவனுக்கே பிடிக்காத நிலை. வயது கூடக் கூட தான் மோசமாகி வருவதாக தனது தாயாரிடமிருந்து வந்த விமர்சனமும் அதுவே.

தனது சகோதரி குஞ்ஞேத்தி ஒருமுறை மத்தேயு அப்போஸ் தலரின் இறை அழைத்தலைப் பற்றி கூறியது அவன் கேட்டிருக் கிறான். தனது ஞானஸ்நான பெயர் மத்தேயு ஆனதால் அந்த சீடரிடம் அவனுக்கு சிறப்பான பக்தி இருந்தது. சுங்கம் வசூலிக்கும் மேடையிலிருந்த அந்த சீடர் ஆண்டவர் தன்னை அழைத்தவுடன் அவர் பின்னால் சென்று விட்டதைப் போல, தான் எதிர்பாராத நேரத்தில் ஆசிரம வளாகத்தில் அல்லது வேறு எங்காவது வைத்து குருவானவர்கள்

"உன்னை இப்பொழுதே துறவற சபையில் எடுத்துக் கொள் கிறோம்"

என்று சொல்வார்களானால் அந்நொடியே தயாரா ? என்று பலமுறை தன்னையே கேட்டிருக்கிறான்.

"ஆம்"

துறவற வாழ்வில் இணைய எப்பொழுதும் தயாராக இருந்தான் இட்டுப்புண்ணி.

அவன் ஒரு முடிவை எடுத்தான். அந்த முடிவை நடை முறைப் படுத்த தடையாய் வந்தவற்றையெல்லாம் தகர்த்தெறியத் தீர்மானித் தான். ஆண்டவர் அழைத்ததும் சற்றும் தயக்கமின்றி உடன் சென்றான் மத்தேயு. பின்னர் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவர் தன்னை அழைத்தால் முழு மனதுடன் உடன்செல்ல தயாரானான். திரும்பிப் பார்க்கும் பேச்சுக்கே இடமில்லை. உறுதியுடன் இருந்தது இட்டுப்புண்ணி எடுத்த முடிவு.

மத்தேயு அப்பஸ்தோலரின் திருநாளுக்கு அடுத்தநாள் செப்டம்பர் 22-ம் நாள் குடும்பத்தாரின் ஜெபங்களுடன் வீட்டிலிருந்து இறங்கினான் இட்டுப்புண்ணி.

# 9. உண்மையே உய்விக்கும்



**சி**றுவயது முதற்கொண்டே உண்மையின்பாலுள்ள பற்றில் உறுதிப்பாடு கொண்டிருந்தான் இட்டுப்புண்ணி. உண்மையாய் இருத்தல் பற்றி தனக்கே உரித்தான புரிதல்களும் உறுதிப்பாடு களும் அவனுக்குள் வளர்ந்துகொண்டிருந்தது. பெற்றோர் அளித்த படிப்பினைகளும் குடும்ப சூழ்நிலைகளும் உண்மை அன்பில் வேரூன்றி வளர்வதற்கு அடிப்படையாக அமைந்தது. தாயாரின் உறுதிப்பாடும் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் பழக்கமும் இட்டுப்புண்ணியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. அடிகளாரே சொல்கிறார்.

"எனது தாயார் தரும் வாக்குறுதிகளை உறுதியாக நம்பினேன். அவர் ஒன்றைச் சொன்னால் எக்காரணத்தைக் கொண்டும் அதற்கு மாறாக செயல்பட மாட்டார். இது இளமையிலேயே எனது உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. சில இக்கட்டான சமயங்களில் அம்மாவின் வாக்குறுதிகளை ஞாபகப்படுத்தி பலவற்றையும் நான் சாதித்திருக்கிறேன். அம்மா ஒன்றை தீர்மானித்தால் அதை நடத்தா

மல் விடமாட்டார். பல ஆண்டுகள் நோய்வாய் படுத்திருந்தாலும் அம்மாதான் குடும்பத்தை ஆட்சி செய்தார். மன உறுதியுடன் சிக்க லான நேரங்களை எதிர்கொள்வார். இது ஒரு தாயைப் பற்றிய மகனின் சாட்சியம்.

சிறுவயது முதலே உண்மையாய் இருத்தலின் அருள் தனக் குள் இயற்கையாகவே வளர்ந்தது குறித்தும், தனக்கே உரித்தான கோழைத்தனத்தை வென்று அது மலர்ந்தது பற்றியும் டன்ஸ்டன் அடிகளார் விவரிக்கிறார்.

“விளையாட்டில் எனக்கு அளவற்ற ஆர்வம் இருந்தது. இருப் பினும் வீட்டில் ஒத்துக் கொள்வார்கள் என்று உறுதியுள்ள விளை யாட்டுகளையும் நண்பர்களுடனும் மட்டுமே விளையாடியிருக் கிறேன். இடையே சண்டை வந்து அவர்கள் விளையாட்டை நிறுத் தும்போது தொடர்ந்து விளையாடுவதற்கான ஆர்வத்தால் எதையும் விட்டுக்கொடுக்க நான் தயாராவேன். ஆனாலும் பொய் சொல்லி உரிமை வாதங்கள்செய்வோருக்கு விட்டுக்கொடுத்ததில்லை.

“நான் பிறவியிலேயே பயந்த குணம் கொண்டவன். ஆனால் அந்த கோழைத்தனத்தையும் ஜெயிக்கும் அளவுக்கு உண்மைக் கான பற்றை எனக்குத் தந்திருக்கிறார் ஆண்டவர். இளமைக் காலம் முதல் இவ்விரண்டிற்குமிடையிலான போராட்டம் எனக்குள் நடந் திருக்கிறது. இறைவன் அருளால் நானே வென்றிருக்கிறேன்.

“எனது புது நன்மைக்காலம் முதல் இவ்விஷயத்தில் மிகவும் ஆழ்ந்த நிலையில் ஆத்தும சோதனை செய்திருக்கிறேன். இதில் மனதறிந்து என்னிடம் தவறு நேர்ந்திருந்தால் அதனை மறத்தல் என்பது அவ்வளவு எளிதும் அல்ல. முழு வாழ்வையும் பரிசோதனைக் கு உட்படுத்திய ஆத்தும சோதனைகளை சிறுவயது முதல் பலமுறை நடத்தியிருக்கிறேன்.”

“பொய் சொல்வது எவ்வளவு சாதாரண விஷயத்துக்காக அல்லது சூழ்நிலையில் இருந்தாலும், அதில் ஒரு சிறிய பாவமாவது

இருக்கும் என்ற தெளிவு பிறந்ததிலிருந்து ஒருமுறை கூட பொய் சொல்ல நான் துணிந்ததில்லை. எனக்குத் தெரிந்து நண்பர்கள் பொய் சொல்லும்போது அது பாவ சங்கீர்த்தனத்தில் சொல்ல வேண்டிய பாவம் என்று பலமுறை சுட்டிக்காட்டவும் செய்திருக் கிறேன்.''

"நான் பொய் பேசியதில்லை என்றுமட்டுமல்ல உண்மையின் பால் அதிகமான பற்றும் எனக்கிருக்கிறது. அந்த பற்று எனக்குள் இருந்த இறையருளுக்கான ஒத்துழைப்பு மூலமாக பெருகிக்கொண் டிருந்தது. இந்த அருங்கொடைக்காக இறைவனுக்கு கோடானு கோடி நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.''

"அனைத்து பாவங்களும் உண்மைக்குப் புறம்பானவைகளே. அறிவுக்கு எதிராக காட்டப்படுவதுதான் பொய். மனசாட்சிக்கு விரோதமாக செயல்படும்போதுதான் அச்செயல் பாவமாகிறது. உண்மையை நேசிப்பவன் அறியாமையிலிருந்தும் தவறுகளிலிருந் தும் விடுதலை பெற முயற்சிக்கிறான். தூய வாழ்க்கை என்பது ஒரு உண்மை அன்பின் வெளிப்பாடு.''

"எளிமையே எல்லா அருளுக்கும் அடிப்படை என்று நாம் கேட்டதுண்டு. சில சமயங்களில் நம்பிக்கையே அனைத்து அருளுக் கும் அடிப்படை என்றும் சொல்வார்கள். இரண்டுமே சரிதான் என்று அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். அப்படியென்றால் எளிமையும் நம்பிக்கையும் ஒன்று தானா? ஆமாம் இரண்டுமே உண்மையின் வெளிப்பாடுகள் தான். இறைவன் தான் படைப்பாளி என்று கூறுவது நம்பிக்கை; நான் அவரது படைப்பு என்று கூறுவது எளிமை. இப்படி விரும்புவதெல்லாம் உண்மையின்பாலுள்ள அன்பில் அடங்கியிருக் கிறது. தெய்வமும் தெய்வீகமான அனைத்தும் அதில் அடக்கம்.''

வாழ்வில் உண்மைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து அதன் நிறை வில் நடத்த வேண்டிய சமர்ப்பண முயற்சிகளில் அருட். டன்ஸ்டன் அடிகளாருக்கு வழிகாட்டியாக வந்தவர் புனித தாமஸ் மூர். புனித

தாமஸ் மூருக்கும் தனக்கும் நிறைய ஒற்றுமைகள் இருந்ததை உணர்ந்த அடிகளார் அப்புனிதரை தனது பாதுகாவலராக ஏற்றுக் கொண்டார். அவரது வாழ்க்கை வரலாற்றைப் பல முறை படித்தார். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவரை மேற்கோள் காட்டினார்.

துறவற வாழ்வைத் தைரியமாகவும், பிடிவாதமுடனும் கொள்கைப் பிடிப்புடனும் வாழ்ந்து முடிக்கவும் தனது இலட்சியத்தை நிறைவேற்றவும் அந்தப் புனிதரின் வாழ்வு அவருக்கு பெரும் தூண்டுகோலாக இருந்தது.

பிரிட்டன் பேரரசராயிருந்த எட்டாவது ஹென்றி மன்னரின் உயிர்த்தோழரும், ஆலோசகருமாக இருந்தவர் தாமஸ் மூர். தனது முதல் மனைவியிடமிருந்து தனக்கு திருமணமுறிவு பெற்றுத் தரும் விஷயத்தில் அவரது சான்சலராக இருந்த கார்டினல் வுள்சி போதிய அளவு முயற்சிகளில் இறங்கவில்லை என்ற காரணத்தால் அவரை அப்பதவியிலிருந்து நீக்கினார் மன்னர் ஹென்றி. அவருக்குப் பதிலாக அப்பதவியை தனது உயிர் நண்பரான தாமஸ் மூருக்கு வழங்கினார். சாதாரணமானவர்களுக்கு ஒருகாலும் எட்டமுடியாத அந்த மகாபதவியை தானமாகக் கொடுத்தது மூலம் மூரை தனது வழிக்கு கொண்டு வரலாம் என்பதே ஹென்றியின் திட்டம்.

ஆனால் மன்னர் சொந்த மனைவியைத் துறந்து மற்றொரு பெண்ணை மணம் முடிக்க எடுத்த தீர்மானத்தை அங்கீகரிக்க தாமஸ் மூருக்கு முடியவில்லை. பாப்பரசரும் மன்னருக்கு அனுமதி மறுத்தார். கோபமடைந்த மன்னர் இங்கிலாந்து சபையின் மன்னராக தன்னையே அறிவித்தார். குடிமக்கள் அனைவரும் கையெழுத்திட்டு இந்த தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். கார்டினல் வூள்சியும் குருமார்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தனர். ஆனால் தாமஸ்மூர் யாருக்காகவும் விட்டுக் கொடுக்காமல் தனது மனச்சான்றின் குரலுக்கு செவிகொடுத்தார்.

மன்னரின் நண்பர் என்றாலும் சான்சிலர் பதவியை இராஜினாமா செய்தார். கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதிபட்டு நின்றார். மன்னரின் தீர்மானத்தில் கையெழுத்திட மறுத்தார். ரத்த சாட்சி யாகத் தயாரானார்.

தன்னிடம் வேறுபாடு காட்டும் தனது ஆருயிர் நண்பரான தாமஸ் மூரின் நிலைப்பாடு ஹென்றி மன்னருக்கு தாங்க முடியாத மன உளைச்சலைக் கொடுத்தது. பல நபர்கள் மூலம், பல வழிகளில், சோதனைகள் மூலம் கடைசியில் மிரட்டல்கள் மூலமாகக்கூட தாமஸ் மூரை தனது வழிக்குக் கொண்டுவர அவர் முயற்சித்தார். மன்னருக்கு ஆதரவாக முடிவெடுக்க பலரும் அவரை உபதேசித் தனர். மூருக்கும் உயிர் வாழ விருப்பமிருந்தது. உறக்கமில்லாத, மன உளைச்சல் மிக்க இரவுகளை கடந்தார். முடிவில் அனைத்து மோகங்களையும், பயங்களையும் வெற்றி கொண்டார். உறுதியான மனதுடன் மன்னருக்கு ஆதரவளிக்க மறுத்தார்.

தாமஸ் மூர் சிறையிலிடப்பட்டார். சிறையில் ஒன்றரை ஆண்டு கள் செலவிட்டபோதும் சகஜமான தனது முகத் தெளிவை கைவிட வில்லை. சிறை வாழ்வு பரிசாகத் தந்த நோய்கள் தன்னை அலைக் கழித்தபோதும், தனக்கே உரித்தான பொறுமையையும், மகிழ்ச்சி யையும், நகைச்சுவையையும் கைவிடவில்லை. படிப்படியாக மன்னர் அளித்த சித்ரவதைகளை புன்னகையுடனேயே ஏற்றுக் கொண்டார்.

தன்னை தூக்கிலிடப் போகிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்த பிறகே மன்னரின் முடிவுபற்றி தனக்கு சொல்ல வேண்டியிருந்ததை தைரியமாகச் சொன்னார். அதுவரை மன்னர் தன்னிடம் கேட்டதை நிறைவேற்ற தன்னால் இயலாது என்று மட்டும் கூறினார். தனது உன்னதமான கொள்கையை மன்னர் முன் உரத்த குரலில் வெளி யிட்டு அதற்கான பரிசையும் பெற்றுக் கொண்டார்.

1935-ஆம் ஆண்டு தாமஸ் மூர் புனிதராக அறிவிக்கப்படும் போது அடிகளாருக்கு வயது 15. அந்த பருவத்திலேயே இறைவன் தனக்கு ஒரு பாதுகாவலரைத் தந்ததாக கருதினார்.

தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையேயான போராட்டத்தில் தர்மத்திற்காக தனது உயிரைக் கொடுத்த கர்ம வீரரை, தனது வாழ்வின் கொள்கை வீரராகக் கண்டார்.



# 10. அபிஷேகமுள்ள குருத்துவ பயிற்சியாளர்

1935 ஆம் ஆண்டு CMI சபையில் துறவற ஆர்வலராக எடுக்கப்பட்டார். 1938 இல் புகுநிலை மாணவராக அனுமதிக்கப்பட்டார். 1939ஆம் ஆண்டு துறவற மாணவராக பயிற்சியைத் தொடங்கினார். தனது முதல் வார்த்தைப்பாட்டின்போது 'டன்ஸ்டன்' என்ற பெயரைத் தெரிந்து கொண்டார். இங்கிலாந்து நாட்டில் 909-988 ஆண்டுகளில் பேராயராக இருந்தவர் புனித டன்ஸ்டன். அதுவரை இட்டுப்புண்ணி என்ற செல்லப் பெயரில் அறியப்பட்ட அடிகளார் 1938 முதல் டன்ஸ்டன் என்று அன்புடன் அழைக்கப்பட்டார். புதிய பெயருடன் புதிய எதிர்பார்ப்புகளுடன் 12 ஆண்டுகள் தொடர்ந்த துறவற குருத்துவ பயிற்சிக்குப்பின் 1947 ஆம் ஆண்டு குருத்துவ அருட்பொழிவு பெற்றார் அருட். டன்ஸ்டன் அடிகளார்.

தனது குருத்துவ வாழ்வின் பெரும்பகுதியையும் துறவற குருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பணியிலேயே அவரை நியமனம் செய்தது CMI சபை.

குருவானவர்களுக்கு பயிற்சி அளிப்பது எவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்த ஒன்று என்பது இறைவனுக்கும், பயிற்சியாளருக்கும் இடையிலான இடைவெளியைப் பொறுத்தது. அந்த இடைவெளி குறையக் குறைய அவர் அளிக்கும் பயிற்சியும் பயன் உள்ளதாக இருக்கும். துறவறம் என்பதே புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிராக இருந்தால் துறவறப் பயிற்சியும், பயிற்சியாளரும் நமது பார்வை யிலிருந்து வெகு தூரத்தில் இருப்பார்கள். ஆனால் நூற்றுக்கணக் கான குருமார்களை உருவாக்கிய ஒரு ஆத்தும சிற்பியைப் பற்றிக் கூறும்போது அப்பணிக்காகவே இறைவன் தெரிந்து கொண்ட அரிய பிறப்பான அருட். டன்ஸ்டன் அடிகளாரின் பெருமை விளங்கும்.

துறவற பயிற்சிக்கு இறையழைத்தல் பெற்ற இளைஞர்கள் தாமாக முன் வருகிறார்கள். அப்படி வருபவர்களின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் இறை அழைத்தலை அணையாமல் பாது காத்தல் மட்டுமல்ல அதனை ஜூவாலையாக்கி எரியச் செய்யவும் வேண்டும். பல்வேறு கவர்ச்சிகள் நிறைந்த இந்த காலகட்டத்தில் வாழும் அவர்களை புத்திசாலிகளும், தெம்பு மிக்கவர்களும், உலகிற்கு பயனுள்ளவர்களும், இறை பிரசன்னத்தில் வாழ்பவர் களுமாக வார்த்தெடுக்கும் மகத்தான பணியைச் செய்வது சுலபமான காரியமல்ல. அதிகாரிகளுக்கும், மாணவர்களுக்கும் ஏற்புடைய வராக ஒரு ஆயுட்காலத்தையே இப்பணிக்காக அர்ப்பணித்த அடி களார் ஒரு புனிதராகவே வாழ்ந்திருக்கிறார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

குருத்துவ மாணவர்கள் உண்மையுள்ளவர்களும் அறத் திற்குக் கட்டுப்பட்டவர்களுமாக இருக்க வேண்டுமென விரும்பினார் அடிகளார். உண்மையின் அங்கீகாரத்திலிருந்தே அறம் புலர்கிறது என்று அடிக்கடி சொல்வார். உண்மையாய் இருப்பதன் வாழ்நாள் சாட்சியத்தைத் தனது வார்த்தைகள் மூலமும், செயல்கள் மூலமும் நிறைவேற்றினார். எந்நேரமும் உண்மையாய் இருக்க மாணவர்

களுக்கு உந்துதலளித்தார். தனது கொள்கை நாயகரான புனித தாமஸ் மூரின் சத்தியத்தின் மீதுள்ள ஈடுபாடு பிறருக்குள்ளும் நிறை யச் செய்ய முயன்றார் அடிகளார். மாணவர்களுக்கு அளிக்கும் உப தேசங்களில் யதேச்சையாக புனித தாமஸ் மூரும் கடந்து வருவார்.

1953-56 கால அளவில் திருச்சூர் அம்பழக்காடு ஆசிரமத்தில் மாணவர்களின் பாவ சங்கீர்த்தகராக இருந்த சமயம் அடிகளாரின் மேற்பார்வையில் புனித தாமஸ்மூரின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக அரங்கேற்றினர்.

துறவற பயிற்சியாளராக இருந்த அடிகளாரிடம் எதையும் உள்ளம் திறந்து பேசுவதற்கான சுதந்திரத்தை அனுபவித்தார்கள் மாணவர்கள். உரத்த குரலில் பேசவும் வாதாடவும் அனுமதி அளித் தார் அடிகளார். திறந்த மனதிலிருந்து தடையின்றி வெளிப்பட்ட எந்த வொரு உணர்ச்சிப் பெருக்கையும் அவர் தடையிடவில்லை. மனந்தி றந்து பேசும் மாணவர்களின் எல்லா தவறுகளையும் மன்னித்தார்.

தங்கள் குறைகளை மனந்திறந்து பேசினால் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்ற பயம் அடிகளாரின் மாணவர்களுக்கு என்றுமே இருந்ததில்லை.

ஒரு மாணவன் தனது அனுபவத்தை இப்படி கூறுகிறார்.

“அடிகளார் பெரிய இறைத்தத்துவங்கள் எதையும் கற்றுத் தரவில்லை. ஒரு முறை அவரைச் சந்தித்தபோது தனிப்பட்ட முறை யில் பின்பற்ற ஒரு கால அட்டவணையைத் தயாரித்து வரச் சொன்னார். அவர் கேட்டதுபோல ஒரு கால அட்டவணையைத் தயாரித்து அடிகளாருக்குக் காட்டினேன். அப்பொழுது அவர் தந்த அறிவுரை இன்னும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அட்டவணை யின் ஒவ்வொரு செய்கையும் துவங்கும்பொழுதும் ஆண்டவரை நினைத்து குறிப்பிட்ட அந்த செயல் வெற்றிபெற ஜெபிக்க வேண்டும். முடியும்பொழுது நன்றிகூறவும் வேண்டும்.

இறை பிரசன்னத்தின் நினைவு கூடுதல் பயிற்சி செய்யவும் அதை வாழ்க்கையின் பாகமாக்கவும் எனக்கு கற்றுத் தந்தார்.”

இறை பிரசன்ன உணர்வை நிரந்தரமாக்க கற்றுக் கொள்ளு தல். ஆத்மீகப் புத்தகங்களைப் படித்தல் போன்றவற்றை டன்ஸ்டன் அடிகளார் மாணவர்களுக்கு கற்பித்தார். அதைவிட முக்கியமாக தனது வாழ்க்கையில் அதனை நடைமுறைப்படுத்தினார். ஆத்மீய உபதேசம் தேடிவருவோரிடம் இந்த ஆத்மீய பயிற்சியைச் சொந்த மாக்க கேட்டுக் கொண்டார். புனிதர்களைப் பற்றி குறிப்பாக சிறுமலர் புனித தெரேசம்மாளைப்பற்றி தனது மாணவர்களுக்கு சொல்லுவார்.

வரந்தரப்பிள்ளியில் குருத்துவ மாணவராயிருந்த ஒருவரது அனுபவம்.

“வராந்தாவிலிருந்து வாசிப்பு அறைக்கு நுழையும் கதவருகே ஒரு அலமாரி இருந்தது. அதில் தோட்ட வேலைக்கான உபகரணங் கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் அந்த அலமாரியில் இருந்து சில பொருட்களை நான் எடுத்தேன். அதிலிருந்த பிற பொருள்களை அலங்கோலமாக விட்டுச் சென்றேன். அதை கவனித்த அடிகளார் அனைவரையும் அழைத்தார். அந்த ஒழுங்கீனத்தை வன்மையாக விமர்சித்துக் கூறினார். அதை இப்படி விட்டுச் சென்றது யார் எனக் கேட்டார். உண்மையில் அதுவொரு தண்டனைக்குரிய குற்றமே. நான்தான் அதைச் செய்தேன் என்று எல்லோர் முன்னிலையிலும் ஒத்துக் கொண்டேன். அடிகளார் கொஞ்சம்கூட கோபப்படவே இல்லை. என்னைப் பார்த்து புன்னகைத்தார். மிகவும் அமைதியாக அப்பொருட்களையெல்லாம் ஒழுங்கு படுத்தி வைக்கச் சொன்னார்.”

அடிகளார் வட இந்தியா ராஞ்சியில் குரு மாணவப் பயிற்சி யாளராக இருந்த சமயம். பயிற்சி இல்லத்திற்கு அருகாமையில் ஒரு பழத்தோட்டம் இருந்தது. பலா, மா, கொய்யா, பீச் போன்ற பழ வகை கள் தாராளமாக பழுத்துத் தொங்கின. பத்தாம் வகுப்பு முடிந்தவுடன் குரு மாணவராக சேர்ந்த மாணவர்கள் சிலர் ஓய்வு வேளையில்

பக்கத்து தோட்டத்திலிருந்து பழங்களை பிடுங்கி சாப்பிடுதல் வழக்கம். உரிமையாளரும், தோட்டக்காரனும் தொலைவில் இருந்த தால் அவர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. இச் செயல் பலமுறை நிகழ்ந்தாலும் ஒருமுறைதான் அடிகளாரின் கண்ணில் பட்டது. அந்த தோட்டம் உரிமையாளரைக் கண்டு விபரத்தைக் கூறி மன்னிப்பு கேட்டவர் தனது பிள்ளைகளுக்கு சாப்பிட அந்த பழங்களை விலை கொடுத்து வாங்கினார்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் இரகசியங்களை பாது காப்பதில் மிகவும் கவனமுள்ளவராக இருந்தார். எந்த விதமான இரகசியமாக இருந்தாலும் நம்பகத் தன்மையுடன் அதனைப் பாது காப்பார். மனம் திறந்து மாணவர்கள் சொல்வது சபை மாநிலத் தலைவரிடம்கூடச் சொல்ல மாட்டார். மாணவர்களின் இரகசியங் களை சபை மாநில அதிகாரிகளிடம் சொல்ல வேண்டியிருந்தால் குறிப்பிட்ட மாணவரிடம் அனுமதி கேட்ட பின்னரே சொன்னார்.

குருமாணவர்களை உருவாக்கும் உன்னதமான பணியில் தெளிவான பார்வையும், வெற்றிகரமான அணுகுமுறைகளும் தனக் குள்ளே செய்து கொண்ட சோதனைகளையும் ஒருங்கிணைத்து சக்திமிக்க பயிற்சியாளராக வெற்றித் திலகமணிந்தார் அருட்தந்தை டன்ஸ்டன் அடிகளார்.

# 11. ஏழ்மை எனும் பலம்



**தா**ன் மிகவும் மதிப்புமிக்கதாக கருதியிருந்த ஏழ்மை என்ற அருளை தனது உணவு மேஜையில் நடைமுறைப்படுத்தினார் அருட். டன்ஸ்டன் அடிகளார். ஒரு புனிதன் ஆகவேண்டும் என்ற ஆர்வம் ஐந்தாம் வயதில் முளையெடுத்தது. முதல் தியாகமாக இனிமேல் உப்பு இல்லாத உணவையே சாப்பிடுவோம் என்று தனது சகோதரி குஞ்ஞேத்தியுடன் எடுத்த தீர்மானம் வாழ்க்கை முழுதும் தொடர்ந் தது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஆனைகட்டி தாண்டி அட்டப்பாடி பகுதி உள்ளது. அங்கு 1973 முதல் 77 வரை ஆதிவாசி மக்களிடையே சமூகப்பணியில் ஈடுபட்டார். அங்கு அவர் தங்கி யிருந்த செயின்ட் ஜோசப் ஆசிரமத்தில் ஆசிரம பராமரிப்பில் இருந்து சமையல் செய்வது வரை அனைத்துப் பணிகளையும் தனியொரு வராகவே செய்து வந்தார். தேங்காய் கீற்றும், துவரம் பருப்பு கொதிக்கவைத்த சாறும் சாப்பிட்டு பசியாற்றினார். ஒருமுறை சமைத்த பருப்பை பலமுறை பயன்படுத்தும் பொருட்டு அதை

நாட்கணக்கில் வைத்திருந்தார். தனக்கு உணவாக அது வேண்டும் இது வேண்டும் என்று பிறரைச் சார்ந்திருப்பதோ தொந்தரவு செய்வதோ எதுவும் இன்றி ஏழ்மை என்ற அருளில் புனித அசீசியாரை மாதிரியாக்கிக் கொண்டார்.

அவர் ஊழியம் செய்த பிற இல்லங்களிலும் எதிர்பாராத விதமாக தொலைதூர பயணங்கள் முடிந்து தாமதமாக வரும் பொழுது அவருக்கென உணவு கருதி வைக்கப்படவில்லை என்றால், அதை சற்றும் பொருட்படுத்திக்கொள்ள மாட்டார். இரண்டு, மூன்று தேங்காய் கீற்றுகளையும் பச்சையாக சாப்பிடத் தகுந்த கேரட், வெண்டைக்காய், தக்காளி போன்ற காய்கறிகளையும் சாப்பிட்டு பசியை ஆற்றிக்கொள்வார். உடலுக்கும் உயிருக்கும் தானே உணவு. சக துறவிகளையோ, ஊழியர்களையோ தெரியப்படுத்தக் கூடச் செய்யாமல்... காலையில் புதுத் தெம்புடன் எழுந்து வந்து விடுவார்.

கன்னியர் இல்லங்களில் குருமார்களுக்குச் சிறப்பான உணவுகள் அதிக கவனத்துடன் தயாரித்து பரிமாறப்படும். அருட். டன்ஸ்டன் அடிகளார் கன்னியர் இல்லங்களுக்கு பாவ சங்கீர்த்தனம் செய்யவோ தியானம், உபதேசம் அல்லது வகுப்பு நடத்தவோ அடிக்கடி அழைக்கப்படுவார். கன்னியர்கள் தங்கள் தயாரித்து வழங்கிய உணவு பற்றி கேட்பார்கள்.

“எதைச் சாப்பிட்டாலும், பசியாறத்தானே” என்ற பொதுவான பதிலைத் தருவார்.

எந்த உணவானாலும், அது சாதாரணமானாலும் சிறப்பானதானாலும் பெருமகிழ்ச்சியோடு உண்பார். அவர் சாப்பிடுவதைக் கண்டாலே அவ்வுணவு அவருக்கு மிகப் பிடித்திருந்தது என்ற மறைமுகச் செய்தி வந்துவிடும். நன்றாக இருந்தது, சிறப்பாக இருந்தது போன்ற எந்த பதிலையும் சொல்ல மாட்டார். இன்னது தான் வேண்டுமென்றோ இது எனக்குப் பிடிக்காது என்றோ நான் இன்று விரதம் என்றோ ஒரு போதும் யாரிடமும் சொல்லமாட்டார். ஒரு துளி உண

வைக்கூட வீண் செய்யவும் மாட்டார். தனக்கு வேண்டியதை மட்டுமே எடுத்துக் கொள்வார்.

தனது ஆசிரமத்தில் உணவு அருந்தும் அறைக்கு வரும் போது சமையலறை சென்று “முன் நேரத்தில் சமைத்தது எதாவது மிச்ச மிருக்கிறதா” என்று கேட்பார். பிறர் புதியதும், சுவையானதுமான உணவை தேடிப்போகும்போது மிஞ்சிப்போன உணவை உண்டு திருப்தி அடைவார். காலையில் சமைத்த உப்புமா, மதியம் சமைத்த சாம்பார், மாலை வேளை தயார் செய்த சேமியா பாயாசம், சிறிது அரிசிசாதம் போன்றவை கலந்ததே சிலநாட்களில் அவரது இரவு உணவு, அதிகமாய் பழுத்து கறுத்துப் போன வாழைப்பழம், மாங் காய், பப்பாளி போன்றவற்றின் அழுகிய பகுதியை மட்டும் அப்புறப் படுத்தி அதிலுள்ள நல்ல பகுதியைச் சாப்பிடுவார். கடவுள் தந்த உணவு, அதில் ஒரு துளிகூட குப்பைத் தொட்டிக்குப் போகக்கூடாது என்பார்.

தனது காலை உணவுக்கு முன்னால் அடிகளார் சமையலறை யைச் சுற்றிவருவது வழக்கம். ஒருமுறை துறவற பயிற்சி இல்லத்தில் சமையலறைக்குச் சென்றார். ஒரு பாத்திரம் மூடி வைத்திருப் பதைக் கண்டார். அதைத் திறந்து பார்த்தார். உப்புமா... உடனே சமையல றை ஊழியர்கள் ஓடி வந்தனர்.

“சாமி, மன்னிக்க வேண்டும். உப்பு சற்று அதிகமாகிவிட்டது. சகோதரர்களுக்கு வேறு உணவு சமைத்துக் கொடுத்துவிட்டோம். உங்களுக்கும் வேறு உணவு இருக்கிறது” என்றார்கள்.

“பரவாயில்லை... வருத்தப்பட வேண்டாம், எனக்கு இதுவே போதும்”. என்றவர் ஒருடம்ளர் தண்ணீர் ஊற்றி அந்த உப்புமாவை கழுவி விட்டு மகிழ்ச்சியுடன் அதனைச் சாப்பிட்டார். தொடர்ந்து வழக்கம் போல ஒரு மண்வெட்டியை எடுத்து தோட்ட வேலைக்குப் புறப்பட்டார். அவரை நோக்கி நின்ற துறவற மாணவர்களுக்கும் சமையலறை ஊழியர்களுக்கும் ஒரே ஆச்சர்யம்.

ஒருமுறை நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்த அடிகளாருக்குக் குடிக்க பால்கொடுத்த அனுபவத்தை துறவற சகோதரர் ஒருவர் நினைவு கூருகிறார். பாலை வாங்கின அடிகளார் சகோதரருக்கு நன்றி கூறினார். சற்று இருங்கள் டம்ளரை இதோ பெற்றுக் கொள்ளுங்கள் என்றவர் அந்தப் பாலில் தனது மேசைமீதிருந்த கறியை ஒரு கரண்டியால் எடுத்துப்போட்டார். மடக் மடக் என்று குடித்தார்... டம்ளரை கொடுத்தார். அந்த சகோதரருக்கு எதுவுமே புரியவில்லை, அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“சகோதரரே, இந்த பாலை நான் சுவைக்காக குடிக்க வில்லை, எனது ஆரோக்கியத்திற்காக தாங்கள் கொண்டு வந்ததால் குடித்தேன். இந்தப் பால் குடிப்பதில் ஆண்டவருக்காக ஒரு தியாகம் செய்யவே இதைச் செய்தேன். தங்கள் முன்னிலையில் இதைச் செய்ய நேர்ந்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள்”

அடிகளாரிடம் அந்த சகோதரருக்கு இருந்த மதிப்பு வளர இதுவே காரணமாயிற்று.

மேற்கூறியவை அடிகளாரின் வாழ்க்கையில் அவர் கடைபிடித்த ஏழ்மை என்ற அருளை நேரில் கண்டவர்களின் வாக்கு மூலங்களிலிருந்து தொகுத்தவை. தனது தனிப்பட்ட தனிமை நிமிடங்களில் இந்த ஏழ்மையைக் கடைபிடித்த சந்தர்ப்பங்களுக்கு ஆண்டவரே சாட்சி. ஆனால் இந்த ஏழ்மையும் ஒறுத்தல்களும் தனது பாதுகாப்பில் இருந்த துறவற குருமார்களிடமும் மாணவர்களிடமும் ஒருபோதும் சோதனை செய்யப்படவில்லை என்பதும் அவர்களுக்கு வேளை தவறாமல் சுவையான ஆரோக்கியமான உணவு வழங்கப்பட்டது என்பதற்கும் நூற்றுக்கணக்கான துறவற சீடர்களே சாட்சி.

எந்தவிதமான முறையீடுகளோ, புகார்களோ இன்றி வறுமை நிலையிலும் திருப்தியடைந்து, கிடைத்ததை உண்டு, அளவான, மிதமான வசதிகளில் ஒதுங்கி, ஏழை எளியவர்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதை விரும்பினார் அடிகளார். ஆசிரமத்தின் பாதுகாப்பு வளையத்தில் இருந்து விலகிநின்று ஆதரவற்ற வறியவர்

களான மனிதர்களுடன், அவர்களுக்கு இடையே கூடாரம் அமைத்து வாழ்ந்த அனுபவமும் அவருக்கு உண்டு.

வறியவர்களிடம் கருணையுள்ளவராக இருந்தார். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களை பிச்சைக்காரர்கள் போல பாவித்து அவர்களுக்கு நல்லது செய்வதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. சொந்தக் காலில் நிற்க அவர்களுக்குப் பயிற்சியும் பக்கபலமும் அளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அட்டப்பாடியில் இருந்தபொழுதும், சிறிது காலம் வடக்கு ராஞ்சியில் இருந்த பொழுதும் ஏழைகள் உயர்வு பெற சிறு திட்டங்கள் பல செயல்படுத்தினார்.

ஏழ்மை என்ற அருளை அதன் உச்சத்தில் நடைமுறைப்படுத்தினார். அவர் எந்தப் பொருளையும் நிலையாகவும் சொந்தமாகவும் பாதுகாக்க விரும்பவில்லை. தனக்கு சொந்தமாக ஒரு பைபிள் அல்லது சிலுவை சொரூபம் கூட இல்லை. சிலுவை சொரூபத்துடன் அல்ல, சிலுவையில் அறையப்பட்டவனுடன்தான் தனக்கு உறவு என்பார். அன்புக்கட்டளையாக யாராவது எதாவது பரிசு பொருட்கள் தந்தால் 24 மணி நேரத்துக்குள் அதனை வேறு யாருக்காவது கொடுத்திருப்பார்.

தையல்களும் ஒட்டுதல்களும் உள்ள இரண்டு காப்பிநிற அங்கிகளும் ஒரு வெண்நிற அங்கியும் சில உள்ளாடைகளும் மட்டுமே அடிகளாருக்கு சொந்தமாக இருந்தது. தேய்ந்து ஓட்டையான தனது செருப்புகள் அவரது வாழ்நாள் துணை. பெரும்பாலும் செருப்புகளின்றியே நடப்பார்.

நிறைவான ஒரு ஆத்மீக மனிதன்... பந்த பாசங்களற்ற வைராக்கியமான துறவற பெருமகனார்... தந்தை டன்ஸ்டன் அடிகளார்.

# 12. அங்கீகரிக்கப்பட்ட ஆளுமை



**எ**ன்றும் எங்கும் உண்மைக்குக் கட்டுப்பட்டவராக இருக்க விரும்பினார் அருட். டன்ஸ்டன் அடிகளார். அந்த விஷயத்தில் சபை சமூகம் அவர் மேல் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தது. யார் பக்கமும் சாயாமல் சத்தியத்திற்காக நடுநிலை வகித்துநிற்பதற்கான ஆத்மீய வீரத்தை அவர் சொந்தமாக்கியிருந்தார்.

துறவற சபையில் நடைபெறும் தேர்தல்களில் நிர்வாகப் பொறுப்பிற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் பொறுப்புக்கு சமூகம் டன்ஸ்டன் அடிகளாரையே நாடியது. சுயநலத்தின் கட்டுக்களற்ற அந்த சுதந்திரப் பறவை பொது நன்மைக்கான நிலைபாட்டையே எடுக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. பல கோட்பாடுகள் உள்ளவர்களையும் வித்யாசமான பார்வைகள் உள்ளவர்களையும் கலந்துரையாடல்கள் மூலம் ஒருங்கிணைப்பதற்கு அடிகளார் வல்லவராக இருந்தார்.

கேரளாவில் வரந்தரப்பள்ளி ஆசிரமத்திற்கு அருகில் ஒரு கல்லூரி நிறுவுவது சம்பந்தமாக ஆசிரம அதிகாரிகளுக்கும் பொது

மக்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. முக்கியத் துவம் வாய்ந்த அந்த பிரச்சனையைக் கையாளுவதற்கு விவேகியும் நீதி வழுவாதவருமான ஒரு தலைமை குருவின் பணி தேவையாக இருந்தது. அன்றைய ஆசிரம உறுப்பினர்கள் டன்ஸ்டன் அடிகளா ரின் பெயரையே முன்மொழிந்தனர். அவர்களது வேண்டுகோளுக் கிணங்க அடிகளார் ஆசிரமத்தின் அதிபராக (Prior) நியமிக்கப் பட்டார். விவாதங்கள் எல்லாம் முடித்து அனைவருக்கும் ஏற்புடைய விதத்தில் மிகவும் நியாயமான முறையில் அங்கு கல்லூரியைத் தொடங்க ஏதுவானது.

திருச்சூர் தேவமாதா சபை மாநிலத்தில் இருந்து 1979 ஆம் ஆண்டு சி.எம்.ஐ. கோவை துணை சபை மாநிலம் உருவானது. அத்துடன் இரண்டு சபை மாநிலங்களின் எல்லைகளைப் பற்றிய சந் தேகங்களும் சர்ச்சைகளும் உதித்தன. பிரச்சனைகளை எதிர் கொள்ள கோவை பிரேஷிதா சபை மாநில அதிகாரிகள் நியோகித்த கமிட்டியின் தலைமை பொறுப்பை டன்ஸ்டன் அடிகளார் வகித்தார். பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து நேர்மையான தீர்மானம் எடுக்க ஏதுவான நடுநிலை அருள்உணர்வு டன்ஸ்டன் அடிகளாருக்கு இருந்தது என்ற சமூகத்தின் நம்பிக்கையே இந்த பொறுப்புக்கு அடி களார் நியோகிக்கப்பட்டதன் காரணம்.

சபையிலும் சமூகத்திலும் அரங்கேறும் அன்றாட நிகழ் வுகளுக்கு நேராக விழிப்புடனும் விமர்சன புத்தியுடனும் கூடிய ஒரு பார்வையை அடிகளார் எப்பொழுதும் கொண்டிருந்தார். அவற்றைக் குறித்த தனது தெளிவான கண்ணோட்டத்தை வெளிப்படுத்தத் தயங்கமாட்டார். தக்கசமயங்களில் நிறைந்த ஈடுபாட்டோடு தனது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வெளியிடுவார். தீமையின் அம்சங்களை வகைப்படுத்தி அவற்றை நன்மையின் அம்சங்களோடு ஒப்பிட்டுக்காட்டுவார்.

ஒரு முறை அடிகளார் ஒரு வீட்டிற்கு விருந்துக்குப் போனார். அவருடன் ஒரு சில குருமார்களும் உடன் இருந்தனர். அங்கு பல் சுவை விருந்துடன் மதுவும் பரிமாறப்பட்டது. ஆனால் குருவானவர் கள் யாரும் மதுபான மரியாதைகளை ஏற்கவில்லை. குடும்பத் தலைவர் குருமார்களை அன்புக் கட்டளைகளால் நிர்ப்பந்தம் செய்தார்.

"சிறிதளவு ருசி பார்ப்பதில் என்ன குற்றம்"

"உங்களை அழைத்த என்னைக் கருதியாவது பங்கு எடுங்கள்"

"திருப்பலியில் நீங்கள் தினமும் மதுவை அருந்துகிறீர்களே"

போன்ற பல நியாய வாதங்களை முன்வைத்தார். அவரது நியாய வாதங்கள் எதற்கும் குருமார்கள் விழவில்லை. தோல்வி யைச் சம்மதித்து அவரும் பின்வாங்கினார்.

தொடர்ந்து பல விஷயங்களைப் பேசினர். சபை அதிகாரிகளின் குறைகள், தவறுகள், குருவானவர்களின் பிழைகள் போன்ற விஷயங்களுக்கு வந்தனர். மதுவருந்தும் குருமார்களைப் பற்றி அந்த குடும்பத்தலைவருக்கு எந்த மதிப்பும் இல்லை. அந்தப் பழக்கமுள்ள குருவானவர்களைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசி னார் அவர். சற்று முன்பு குருமார்களை மதுவருந்த நிர்ப்பந்தித்த அவரே அனைத்தையும் மறந்து குருவானவர்களை விமர்சித்தார்.

"அந்த மனிதரின் பேச்சைக் கேட்டு நாம் மதுவருந்தியிருந்தால் பெரிய மானக்கேடாகி இருக்கும்"

விருந்து முடிந்து திரும்பும் வழியில் குருமார்கள் சொன் னார்கள்.

துறவற சபை மாநிலத்தின் ஆலோசனை குழுவிலும், சபை சார்ந்த கூட்டங்களிலும் டன்ஸ்டன் அடிகளாரின் குரலுக்கு தனி செல்வாக்கு இருந்தது. கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் அணுவளவு கூட பிறளவோ நீதியின் நடுநிலையைக் கடுகளவு விட்டுக் கொடுக்கவோ செய்யமாட்டார் அடிகளார். தனது சொந்த

அபிப்பிராயங்களை வெளிப்படையாகச் சொல்வதில் யாருக்கும் அஞ்சமாட்டார். எதிர்ப்புகளை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளமாட்டார். காயங்களைக் கண்டுகொள்ளாமல் போராடுவார். தனிமைப்படுதலை ரசிப்பார். வாழ்க்கையின் எல்லா தளங்களிலும் தான் கொண்ட உண்மையின்பாலுள்ள இந்த ஈடுபாட்டை நிறை வேற்ற முயன்றதனால் கணக்கற்ற உட்போர்களை அவர் அனுபவித் தார். உறுதிப்பாட்டுடன் கொள்கைக்காக போராடிய போது "பிடி வாதக்காரராக" முத்திரை குத்தப்பட்டார்.


"உண்மையானதை நம்புங்கள்; நம்புவதைச் சொல்லுங்கள்; சொல்வதைச் செய்யுங்கள். உண்மையின் அங்கீகாரத்திலிருந்தே நீதி நிறைவேறும்". இது டன்ஸ்டன் அடிகளாரின் வாழ்க்கை முத்திரை. சபைக்கு எங்காவது தவறு நேர்ந்துள்ளது என்றால் அது உண்மையின்பாலுள்ள ஈடுபாட்டின் குறைவே என்பதை அடிகளார் கருதினார்.

உண்மைக்காக முகம் பார்க்காமல் வாதிடும்போதும் தனக்கே உரித்தான தனது எளிமை பாவமும் சாந்த குணமும் அவரது ஆளுமையிலிருந்து சோடை போகவில்லை. ஏனெனில் அங்கு பழிவாங்கும் மனமில்லை உண்மையின்பாலுள்ள பற்றுதலும், நீதிக்கான சகிப்புத் திறனுமே இருந்தது. கறையற்ற மனநிலையும் நீதி உணர்வின் கொண்டாட்டமும் அந்த ஆளுமையின் தனிச்சிறப்பு. பொய்மைக்கு எதிராய் சிம்ம குரல் கொடுக்கும் போதும் வழிதவறி நடப்பவர்களிடம் சற்றும் மரியாதை குறையாமல் பேசவும் அவர் களை மதிக்கவும் அடிகளாரால் முடிந்தது. அதனாலேயே அடிகளார் கூறும் கருத்துக்களை எதிர்த்தவர்கள் கூட அவரை மதித்தனர்.

முற்றிலும் தூய்மையான இதயத்தின் உரிமையாளர், இறைவழி பயணத்தில் உண்டாகும் எந்தவொரு தடையையும் எதிர்கொள்ள ஆழ்ந்த பொறுமை, தடைகள் தரும் வேதனைகளை கடந்து செல்ல தேவையான ஆளுமை, எந்த தியாகத்தையும் ஏற்றுக் கொள்ளும்

மனவல்லமை, இவையே அருட். டன்ஸ்டன் அடிகளாரின் தனிச் சிறப்புகள்.

களங்கமற்ற மனம், மாற்று மறையற்ற தலைமைப் பண்பு, சொல்லிலும் செயலிலும் ஒற்றுமை, சுற்றிவளைக்காமல் பேசும் முறை, சற்றும் ஒளிவுமறைவற்ற எளிமையான வாழ்க்கை போன்றவை அடிகளாரது முகமுத்திரையாக விளங்கின.



# 13. இயற்கையின் காதலன்

அருட். டன்ஸ்டன் அடிகளார் தாவரங்களின் நண்பனாகவும் இயற்கையின் தோழனாகவும் உடல் உழைப்பின் அடையாளமாக வும் காணப்பட்டார். செடிகளை நோக்கி மௌனமான மொழியில் பேசுவார், மரங்களிடம் அன்பைப் பொழிவார். தாவரங்களைச் சகோதரிகளாகக் கண்டு அவர்களிடம் அன்பைப் பொழிந்த தூய பிரான்சீஸ் அசீசியாரைப் போல ஒவ்வொரு இலையையும் தனது தியானத்திற்கு பொருளாக்கி துளிர் முதல் சருகாவது வரை உள்ள நிலைகளை இறைவனுக்கு சமர்ப்பிப்பார்.

ஐந்து வயதிலிருந்தே காட்டுவழியாகவும் இயற்கை நீரோடை யின் வழியாகவும் செடிகளிடமும், பூக்களிடம் மௌனமாக பேசிக் கொண்டே நடப்பார். அந்தப் பேச்சுகளில் இறைவனின் கைவண்ணத் தைப் புகழ்வார். இயற்கை மூலம் அவருக்கு இறைவன் அளித்த பாதுகாப்புக்கு நன்றி சொல்வார். மெதுவாகவே நடந்து ஆலயத்தை அடைவார்... பள்ளியை அடைவார்.

இளமைக்காலம் முதல் இயற்கையிடம் பேசி அவற்றிடம் இறை அன்பைப் பரிமாறி வந்த அடிகளாருக்கு 1973 முதல் 1977 வரையுள்ள காலகட்டத்தில் பசுமை பிரபஞ்சத்தில் இறகு வீசி பறக்கும் ஆனந்த அனுபவம் வாய்த்தது. மேற்கு தொடர்ச்சி மலைகளின் கிரீடமான அமைதிப் பள்ளத்தாக்கிற்கு (Silent Valley) அருகாமையில் அட்டப் பாடி பகுதிகளில் பணிசெய்யும் வாய்ப்பினைப் பெற்றார். மலைகளும், மலைசார்ந்த காடுகளும், மலைசார் மக்களும் அவரது கரங்களில் தவழ்ந்தன.

புதர்களை விவசாய பூமியாக்கி, காய்கறி பழவகைகளைப் பயிரிட்டு, பலன்தரும் மரங்களை வளர்த்து இயற்கையின் காவல னாய் திகழ்ந்தார். இயற்கையுடன் ஒன்றாகக் கலந்து இறைப்பணி யில் சிறந்தார். அந்த அனுபவத்தை அவரே சொல்கிறார்,

"அட்டப்பாடியின் இயற்கை எழில் என்னை இறைவனிடம் நெருக்கமாக்கியது. சூரியன் உதித்தலையும் மாலை மறைதலை யும் மிகவும் இரசித்தேன். குளிர்மிகு காலை வேளைகளில் வான மெனும் வீதியில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து வரும் மேகங்களின் அழகை ரசித்து மெய்மறந்திருக்கிறேன்."

அனைத்திலும் இறைவனைக் கண்டார், அனைத்தையும் இறைவனில் கண்டார். அவ்வண்ணமே வாழ்வை நிறைவாக்கினார்.

பிரபல தாவரவியல் பேராசிரியர் அருட். தாமஸ் ஆச்சாண்டி தனது அனுபவத்தை விவரிக்கிறார். அருட். டன்ஸ்டன் அடிகளார் அட்டபாடியிலிருந்த சமயம். கேரளத்திலிருக்கும் மூலிகைச் செடி களைப் பற்றி விவரிக்கும் "ஹார்ட்டஸ் மலபாரிக்கஸ்" (Hortus Malabaricus) என்ற 12 தொகுதிகளாக 84,000 பக்கங்களுள்ள லத்தீன் புத்தகத் தொகுப்பை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கும் பெரும் பணியில் அருட். தாமஸ் அடிகளார் ஈடுபட்டிருந்தார். அருட். டன்ஸ்டன் அடிகளாருடன் தங்கி அவர் அந்தப் பணியின் ஒரு பகுதியை நிறைவு செய்தார். பழைய இலத்தீன் மொழியில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டிருந்த அந்தப் புத்தகத் தொகுப்

பினை மொழி மாற்றம் செய்வது என்பது முற்றிலும் கடினமான ஒரு இலக்கு. பழைய இலத்தீன் மொழியில் எழுந்த எல்லா சந்தேகங் களையும் நிவர்த்தி செய்து கொடுத்தது அருட். டன்ஸ்டன் அடிகளார் ஆவார். அது மட்டுமின்றி, தாமஸ் அடிகளா ரைக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று படங்களில் இருந்த மூலிகைச் செடிகளை நேரில் தொட்டுக் காண்பித்து ஒவ்வொரு செடியின் தனித்தன்மைகளையும் விவரித்துக் கொடுத்தார். செடிகளையும், பூக்களையும் அவற்றின் விரிவான பயன்களையும் அறிந்து அன்பு செய்த ஓர் இயற்கை ஆர்வலரை டன்ஸ்டன் அடிகளாரில் கண்டு வியந்தார் அருட். தாமஸ் அடிகளார்.

குருத்துவ மாணவர்களின் குருவாக பணியாற்றிய காலங்களில் பயணம் முடிந்து திரும்பி வரும் அடிகளாரிடம் ஒரு சிறு தோட்டமே இருக்கும். தான் சென்ற இடங்களில் இருக்கும் புதுச் செடிகளை எப்பாடுபட்டேனும் கொண்டு வந்து இங்கு அந்தச் செடிகளை நட்டு பலன் காணச் செய்வார். அழகிய இந்தப் பிரபஞ்சத்தை மேலும் அழகுள்ளதாக மாற்றும் பணியில் தனது பங்கினைத் தனக்கே உரித்தான பிடிவாதமுடன் செய்தார்.

தோட்ட வேலை செய்வது என்பது அடிகளாருக்கு மிகவும் ஆர்வமுள்ள பணி. ஆத்மீகத்தின் ஒரு பாகமும் கூட. தனது ஏழ்மை மற்றும் ஜெப வாழ்வின் பிரிக்க முடியாத பாகமாக அதனைக் கருதினார் அடிகளார். வாழ்வில் போராட்டங்களும், சோதனைகளும் மிகச் சாதாரணமானவை. அவற்றை எதிர்கொள்ள உடலுழைப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்குமென நம்பினார் அடிகளார். தனக்கே உரித்தான உடலுழைப்பாக தோட்டவேலையை தேர்ந்துகொண் டார்.

எந்த வேலை செய்வதற்கும் அடிகளாருக்கு மடி என்பது இல்லை. தோட்ட வேலையாக இருந்தாலும், கழிவு நீர் சுத்தீகரிப்பு வேலையானாலும், வீடு, சுற்றுப்புறம் சுத்தமாக்கும் வேலையாக இருந்தாலும் சரளமான மனதுடன் ஏற்றுச் செய்வார். பாத்திரம் கழு

வுதல், கழிவறை சுத்தம் செய்தல் போன்ற ஆசிரமத்துடன் தொடர்பு கொண்ட எந்த வேலைக்கும் முன்னால் இருப்பார். குருத்துவ மாணவர்கள் செய்யவேண்டிய வேலைகள், மறதியால் அல்லது அசதியால்அவர்கள் செய்யத் தவறினால் அவர்களைக் குறை கூறவோ தண்டிக்கவோ செய்யாமல் தானே அவற்றைச் செய்து முடிப்பார்.

காலை சிற்றுண்டிக்குப் பிறகு மண்கொத்தியையும் (Pick Axe) எடுத்துக்கொண்டு தோட்ட வேலைக்காக இறங்குவார். குருத்துவ மாணவர்களில் ஒருவராக அல்லது தன்னந்தனியராக போர்க்களம் புகுவார். தனது 83 வது வயதில்கூட மண்வெட்டி, வெட்டுக்கத்தியுடன் களம் இறங்கிய அடிகளாரது மன இளமை, 18 வயது இளைஞர் களான துறவற மாணவர்களுக்கும் ஊக்கமளித்தது.

சரவணம்பட்டி புகுநிலை துறவற இல்லத் தோட்டத்தில் மஞ்சள் பாவட்டை மரங்களும், அருகம்புல்லும் நிறைய இருந்தன. பொறு மையாக அந்தப் புற்களை வேருடன் பறித்து அப்புறப்படுத்த அடி களார் சிரத்தை செலுத்தினார். தோட்டத்தில் காணப்பட்ட அருகம் புல்லும் அதனடியில் தோன்றும் களைக்கிழங்கும் ஆன்மீகத்தின் பொருளாக மாறியது. ஆழத்தில் வேரூன்றியிருக்கும் அக்களை யின் கிழங்கும், வேர்களும், மண்வெட்டி, முள்கொத்தி, மழு போன்ற பணி ஆயுதங்களை பயன்படுத்தி பிழுதெடுத்து அகற்றுவது எப்படி யென்று மாணவர்களுக்குச் செய்து காட்டுவார். மேல் மண்ணை மட்டும் சுத்தம் செய்தால் ஆழத்தில் ஒளிந்து வளரும் வேருக்கு ஒன் றும் ஆகாது. வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளிலும் களை களைப் பிழுதகற்றி தூய்மையின் கருத்தான முளைகள் குருத் தெடுக்கத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற செய்தியைத் தோட்ட வேலைக்கிடையிலும் அவர்களுக்கு பகிர்ந்தளித்தார்.

ஒரு சமயம் டன்ஸ்டன் அடிகளாரும், ஒரு மாணவரும் சேர்ந்து தோட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு நடவு செய்தனர். இரண்டு நாள் கழித்து அதே மாணவரை அழைத்து ஒரு பையில் கீரை விதை

களைப் போட்டு மரவள்ளி நடவு செய்த பாத்திகளில் அவற்றைத் தூவி வரச்சொன்னார்.

"சாமி, மரவள்ளியும், கீரைச் செடிகளும் எப்படி ஒன்றாகப் பயிராகும்"

அந்த மாணவருக்குச் சந்தேகம்.

"சகோதரரே, இங்கு மரவள்ளி சாகுபடி என்பது சற்று கடினம். அப்படியே கிழங்கு விளைந்தாலும் அதை எலி கொண்டுபோய் விடும். அச்சமயம் கீரை நமக்கு கைகொடுக்கும்".

அத்துடன் ஒரு துறவறச் செய்தியையும் கூறினார்.

"சன்னியாசத்தில் சிறியவற்றுக்கே நிலைத்துநிற்க முடியும்".

அவர் சொன்னது போலவே மரவள்ளி விளைந்தது; பருவம் வரும் முன் அனைத்தையுமே எலி தின்று விட்டது. கீரையோ நன்கு தழைத்து வளர்ந்து புன்னகை பூத்து நின்றது.

உடலுழைப்பிற்கு இயலாத வேளைகளிலும், வேலைகளி லிருந்து அவர் விட்டு நிற்கவில்லை. நடைப்பயிற்சியை ஒரு நாளும் கைவிட்டதில்லை. நடையின் இடையிலும் சருகாய் விழுந்த இலை களை அப்புறப்படுத்துவார். தென்னம்பட்டைகளையும் மரத்தின் சுள்ளிகளையும் சேகரித்து சமையலறையில் சேர்ப்பார். பழுத்து வீழ்ந்திருக்கும் பழங்களைச் சேகரித்து வந்து தனது பிள்ளை களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்.

யாதொன்றையும் சொந்தமாகக் கருதாமல், யாதொன்றிற்கும் அடிமையாகாமல் பற்றற்ற ஞானியாக இருந்த அடிகளார் வாழ்வை ரசித்து ருசித்து அனுபவித்தார். முற்றிலும் தியாக வடிவில் இருந்தது அந்த நிறை வாழ்க்கை. திவ்யமான உள் உந்தலில் பிரபஞ்சத்தைக் காதலித்த இறைஞானி.

# 14. நிரந்தர இறை பிரசன்ன உணர்வில்



ஒரு துறவிக்கு எது அழகு? துறவியின் அடையாளம் என்ன? இடைவிடாத இறை உணர்வுடன் நிரந்தரமான இறை ஒன்றிப்பில் வாழ்வது. அந்த நினைவின் நிறைவிலிருந்து நிரம்பி வழியும் ஆத்மீய மகிழ்ச்சியை தனக்கு சுற்றும் இருப்பவர்களுக்கு பகிர்வது. அதுவே துறவு தரும் பலன்.

நிரந்தர இறை பிரசன்ன உணர்வில் வாழ்வது என்பது டன்ஸ்டன் அடிகளாரது வாழ்க்கை முறையாக இருந்தது. சாதகமான சூழ்நிலை இல்லாதபொழுதும், தியானம் செய்யவோ, ஜெபிக்கவோ ஏற்ற வசதி கள் இல்லாத பொழுதும், வேலைகளின் சுமை அதிகமாக இருக்கும் பொழுதும் இறைவனுடன் நிறைவாக தொடர்புகொள்ள அடிகளா ருக்கு முடிந்தது.

தரையை நோக்கி உட்கார்ந்துகொண்டிருந்த அடிகளாரை வெகுநேரமாக கவனித்துக் கொண்டிருந்த ஒரு குழந்தை கேட்டது.

“சாமி கண்களை திறந்துகொண்டா தூங்குகிறீர்கள்”.

குழந்தையின் வெள்ளந்தியான கேள்விக்கும் பதில் அளித்தார் அடிகளார்.

“அங்கே பார். இயேசப்பா முகம் தெரிகிறதா”.

“இல்லையே...”

குழந்தை தெளிவாக பதில் அளித்தது.

“உன் கண்ணுக்கு இப்பொழுது தெரியாது; எல்லா இடங்களிலும் நமது இயேசப்பா நம்மைப் பார்த்து புன்னகைப் பூப்பதை நீயும் தெரிந்து கொள்வாய்”.

குழந்தைக்கு அதைப் புரிந்து கொள்ள இயலவில்லை என்றாலும் குழந்தை உள்ளத்துடன் இருந்த அடிகளார் தனது தியான முறையை வெளிப்படுத்தத் தயங்கவில்லை.

“மனதால் ஆண்டவரின் உருவத்தைக் கற்பனை செய்து கொண்டு அந்த உருவத்தை நோக்கி மணிக்கணக்கில் தியானிக்க முடியும். உரையாட முடியும்.”

தனது தியான முறையை மாணவர்களிடம் பகிர்ந்துகொண்டு பயிற்சியளித்தார்.

இறை பிரசன்ன நினைவை நிரந்தரமாகப் பயிற்சி செய்தல், ஆத்மீகப் புத்தகங்களைப் படித்தல் போன்றவை அடிகளார் நிரந்தரமாக நடத்தி வந்த ஆத்மீக நடைமுறைகள். ஆத்மீக அறிவுரைகளுக்காக அவரை நாடுவோருக்கும் இதுபோன்ற பயிற்சிகளைச் செய்ய அறிவுறுத்தினார். புனிதர்களைப் பற்றியும் குறிப்பாக சிறுமலர் தெரேசம்மாளைப் பற்றியும் அவர்கள் பின்பற்றிய ஆத்மீக நடைமுறைகளைப் பற்றியும் தனது குரு மாணவர்களிடம் பேசினார்.

இடைவிடா ஜெபத்திலும், இறைவனின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிய மறக்கவில்லை அடிகளார். அவரது மாணவர் ஒருவர் தனது சகோதரி புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதையும், அவளுக்காக வேண்டிக்கொள்ளும்படியும் அடிகளாரை கேட்டுக் கொண்டார். அந்த இளைஞரை புனித தெரேசம்மாளின் சுருபத்திற்கு முன்

அழைத்துச் சென்று அவரைப் பார்த்துச் சொன்னார்.

“சகோதரா, உனது சகோதரிக்காக உளமுருகி வேண்டுவேன். திருப்பலியிலும் நினைவு கூருவேன். ஆனால் நாம் எதிர்பார்ப்பதற்கு விபரீதமாக நிகழ்ந்தாலும் இயேசப்பாவிடம் சங்கடப்படக் கூடாது”

என்றார். அந்த வார்த்தைகள் அந்த சகோதரருக்கு ஆறுதலாக இருந்தது.

இறை நடத்தலில் முழுமையாக நம்பி பெருமகிழ்ச்சியுடனும், முக மலர்ச்சியுடனும் வாழ்ந்து வந்த மறைஞானி அவர். ஆவிலா நகரின் புனித தெரேசம்மாள், திருச்சிலுவையின் புனித யோவான், சிறுமலர் புனித தெரேசம்மாள் போன்ற கார்மேல் புனிதர்கள் அடிகளாரை வெகுவாக கவர்ந்தவர்கள். அவரது ஜெபத்திலும் எளிமையான வாழ்க்கை முறையிலும், கார்மேல் ஆத்மீகம் ஒளிர்ந்து பிரகாசித்தது.

பிரம்ம ஞானத்தின் செழிப்பான மண்ணில் துளிர்விட்டு வளர்ந்ததே அடிகளாரது ஆளுமை. துறவற அர்ப்பணிப்பின் நிறை வில் தீவிரத்தன்மை பெற்ற அந்த இறைஉறவு இடைவிடாத நீரூற் றாக ஒழுகத் தொடங்கியது. நினைவுகள் மழுங்கி போய் நபர் களையும் அவர்களது பெயர்களையும் இணைத்துப் பார்க்கும் சக்தியை இழந்த தனது முதுமையிலும் அந்த இறை ஊற்று தடை யின்றி உள்ளூர ஒழுகியது.

திருப்பலியும், நன்மை வாங்குதலும் திருப்பலிக்கு பிறகு நடத்தும் நன்றிக் காணிக்கையும் ஒப்பற்ற தருணங்களாக கொண் டார். தனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே இறைவனுடன் லயிக் கும் இணையற்ற அந்த நொடிகளை முழுமையாக இரசித்தார் அடிகளார். அந்த நொடிகளுக்காக காத்திருப்பார். பள்ளிப் பருவத் திலும், துறவற பயிற்சி காலகட்டத்திலும் குருவானவராகி குருக் களை வார்த்தெடுக்கும் தனது வாழ்வின் முக்கியப் பணி காலக் கட்டத்திலும் ஓய்வெடுக்கும் தனது பணி நிறைவு நாட்களிலும் அந்த

இறை ஒன்றிப்பு நாளுக்கு நாள் சக்தி பெற்றதே அன்றி ஒரு அணுகூட குறைந்ததில்லை. நெருக்கடி நாட்களில் தெய்வீகமான அடைக் கலமும் அந்நெருக்கடியை எதிர்கொள்ளும் சக்தியும் ஈடு இணை யற்ற இந்த இறை ஒன்றிப்பின் கொடைகளே. புனிதமான அந்த நிமிடங்களை எந்த அளவிற்கு அரியதாக கருதினார் என்றும் தனது ஆத்மீக வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் அது பயன்பட்டது என்றும் அவரே குறிப்பிடுகிறார்.

"நன்றி அறிவிப்பின் அந்த நிமிடங்களில் என்னைச் சுற்றி நிகழ்வது எதுவும் தெரியவில்லை".

தனக்குள் எழுந்தருளியிருக்கும் ஆண்டவரை மையப்படுத்தி யே அவரது கவனம் முழுவதும் ஒருமைப்படுத்தப்பட்டிருந்தது.

திவ்ய நற்கருணை உட்கொண்டதும்

"என்னை ஒரு புனிதனாக்குவீர் ஆண்டவரே, எனது தாய்க்கு முன்பாக என்னை உம்மிடத்தில் ஈர்த்துக் கொள்ளும்"

என்ற இரண்டு விண்ணப்பங்களை முன் வைத்து வந்தார். தான் ஒரு குருவானவராகி, திருப்பலி ஒப்புக் கொடுப்பதை சுய நினை வுடன் கண்டு அதன்பிறகே தாயாரை அழைக்க வேண்டும் என்றும் ஜெபத் தில் இணைத்துக் கொள்வார்.

ஒரு புனிதன் ஆவதற்கான வழியாக துறவறத்தைத் தெரிந்து கொண்ட நிமிடம் முதல் தன்னையும், தனது சகோதரர்களையும், நண்பர்களையும் துறவற வாழ்வுக்கு ஈர்க்க வேண்டும் என்று ஜெபிக்கத் தொடங்கினார். அந்த ஜெபமே பிற்காலத்தில் தன்னிடம் துறவற வாழ்வுக்காக தாமாகவே முன்வந்து ஒப்புக்கொடுத்த இளைஞர்களையும் புனிதர்களாக்க வேண்டி இறைஞ்சும் ஜெபமாக உருவெடுத்தது.

நோய்கள் ஒன்றன்பின் ஒன்றாக தன்னைத் தாக்கியபோதும் தனது மாணவர்களுடன் திருச்சடங்குகளிலும், குழு ஜெபங்களிலும் முழங்காலில் நின்று கலந்து கொள்வார். விடியும் பொழுதுகளிலும்,

நடுநிசியிலும், பகல் வேளைகளிலும், ஒய்வு நேரங்களிலும் என காலம் நேரமின்றி திவ்ய நற்கருணையின் முன் செலவழிப்பார். தலைகுனிந்து, கைகளை விரித்துக் கொண்டு முழங்காலில் நின்றபடி ஜெபிப்பதை கண்கூடாகக் கண்ட பிற குருமாரர்களும், குருத்துவ மாணவர்களும் அவருக்குள் தங்களிடையே நடமாடும் ஒரு புனி தரையே கண்டனர்.

நோய்கள் மற்றும் முதுமையின் தாக்கமான களைப்புடன் இருந்த வேளையிலும், திவ்ய நற்கருணை முன்பாக மணிக்கணக் கில் செலவிடுவது அவரது வாழ்வின் பாகமாகவே இருந்தது. அடி களாருக்கு துணையாக இரவில் அவருடன் தங்கியிருந்த குருத்துவ மாணவர்களுக்கு இது வாழும் சான்று.

சில சமயங்களில் ஜெபத்திற்கு நடுவே அடிகளார் உறங்கிப் போவதுண்டு. ஒரு முறை ஒரு மாணவன் அவரிடம் கேட்டான்.

“சாமி, கோவிலுக்குள்ளே தூங்கிட்டு இருந்தீங்க போல இருக்கு”

“ஆமாம், உண்மைதான் நான் தூங்கினேன், தூங்கினாலும் ஆண்டவரின் மடியில்தான் இருந்தேன். திவ்ய நற்கருணையின் சன்னிதியில் இருப்பது மட்டுமே முக்கியம்”.

அவரது பதில் அந்த மாணவருக்கு திவ்ய நற்கருணை பக்தியை ஆழத்தில் வேரூன்றிப் பதிய வைத்தது.

சடங்குக்காக மேலோட்டமாக ஜெபங்களைச் சொல்லி நேரத் தைக் கழித்த குருவானவர்களும் மாணவர்களும் அடிகளாரைக் கண்டபின் ஆழமான பக்திக்கு திரும்பினர். ஒரு முறை அவரை கண்ட வர்கள் கூட இறை ஒன்றிப்பின் வரம் பெற்றனர்.



# 15. தந்தையின் இல்லம் நோக்கி

**த**னது வாழ்வின் இறுதி நாட்களில் தெளிவற்ற நினைவுகளில் வாழ்ந்த போதும் அடிகளாரது சின்ன சின்ன வார்த்தைகளும், புன் சிரிப்பும் மாணவர்களுக்கு ஆத்மீகமான வழி நடத்தல்களாக மாறின. அவரைப் பார்த்தாலே ஆத்மீக சைதன்யம் ஒளிவிடும் அனுபவமாக இருந்தது அவர்களுக்கு. அடிகளாரது பிரசன்னம் சாந்தியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. மாணவர்களின் ஒற்றுமைக்கும், ஆத்மீக வளர்ச்சிக்கும் அந்த பிரசன்னம் உதவியது.

நிரந்தரம் இறை உணர்வில் ஒன்றித்து தூய்மையின் தவத்தில் மூழ்கியிருப்பார் அடிகளார். மரணத்தை நெருங்கி முற்றிலும் பலவீன ராகி முடங்கியபோதும் அதே தவத்தில் தொடர்ந்தார். இளம் பருவம் முதல் தனக்குள்ளே ஊற்றாகி ஒழுகிய இறைக் காதல் முதுமையின் பலவீனங்களைத் தகர்த்து இடம், கால, விவேகமின்றி மடைதிறந் தொழுகியது. திவ்ய நற்கருணையின் முன்பு அழுது ஜெபித்தார். இதயத்தின் நிறைவிலிருந்து இறை துதிகள் ஒழுகின. ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத தெளிவற்ற வார்த்தைகளால் உரத்த

குரலில் ஜெபித்தார். அந்த ஜெபம் கேட்பவர்களுக்கு நிம்மதியும், உத்வேகமும் அளித்தது. துயருறுவோருக்கு ஆறுதலும், வருத்தப் படுவோருக்கு தாங்குதலும், இறை அழைத்தலில் தெளிவற்றவர் களுக்கு தெளிவும் அளித்தது.

ஒரு மாணவன் தனது அனுபவத்தை விளக்குகிறார்.

“இரவு ஆத்தும சோதனை நேரம்...மனஅளவில் மிகவும் பலவீனனாக இருந்தேன். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை... சிந்தனைகள் என்னைக் கட்டி இழுக்கின்றன... அசைய முடிய வில்லை... தலை வெடித்து விடுவது போன்ற நிலை... யார் எனக்கு உதவுவார்? கடவுளே, எனது உதவிக்கு வாரும்...”

இதயம் நொந்து வேண்டினேன்.

அந்த அமைதியிலும் ஒரு சத்தம்...

“ஓ... இறைவா எனது உதவிக்கு வாரும்... ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்... சாமி நமது மாணவர்கள்... நமது குழந்தைகள்... அவர்களை காப்பாற்றுங்கள்.”

தனது சுய நினைவை இழந்த அடிகளார் ஜெபிக்கிறார்.

“அவருடன் நானும் இணைந்து ஜெபிக்கத் தொடங்கினேன். ஆண்டவரே என் உதவிக்கு வாரும்...”

அப்போது நான் பெற்ற ஆறுதல், இன்பம் விவரிக்க இயலாதது.

கடைசி நாட்களில் கோவை, சரவணம்பட்டி, அருள் மலர் இல்லம், கொழிஞ்சாம்பாறை செயின்ட் தாமஸ் ஆசிரமம், கவுண்டம் பாளையம் லிட்டில் பிளவர் மைனர் செமினரி போன்ற இடங்களில் குருமார்கள் மற்றும் குருத்துவ மாணவர்களின் உதவியுடன் டன்ஸ்டன் அடிகளார் ஓய்வு வாழ்க்கை வாழ்ந்தார். மூன்று ஆண்டு கள் அடிகளாரது உதவியாளர் என்ற நிலையில் திரு. கணேசன் என்ற இளைஞர் அவருடனேயே இருந்தார். புனிதரான அந்த சன்னி யாசிக்கு ஊழியம் செய்வதில் அனைவரது இருதயங்களும் அன்பால் நிறைந்தது.

2002 முதல் சரவணம்பட்டி அருள்மலர் இல்லத்தில் உறுப் பினராக இருந்தார் அடிகளார். 2006-ல் குருத்துவ பயிற்சி இல்லம்,

வேலந்தாவளம் பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கு கட்டிட வேலையும் நடந்து கொண்டிருந்ததால் அடிகளாரை கவுண்டம்பாளையம் செமினரியில் தங்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

நாட்கள் செல்லச் செல்ல அடிகளாரது உடல்நிலையும் மோச மாகியே வந்தது. சரவணம்பட்டி விமல் ஜோதி மருத்துவமனை, கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனை போன்ற மருத்துவ மனைகளில் ஆய்வு செய்யப்பட்டு சிகிச்சையும் தொடர்ந்தது.

2006 அக்டோபர் மாதம் 20ஆம் தேதி அடிகளார் மிகவும் தளர்ந்தவராய், மரணத்தை எதிர் நோக்கியவராய் காணப்பட்டார். அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தவரின் கரத்தை இறுகப் பற்றினார்.

“நான் இறந்து விட்டேன்... இதோ நான் போகிறேன்... மகிழ்ச்சி யுடன் நான் போகிறேன்... ஆண்டவரே இயேசுவே எனக்கு உதவியாக இரும்.... என்னை மீட்டுக்கொள்ளும்...”

என்ற வார்த்தைகளை அடிக்கடி உருவிட்டுக் கொண்டே இருந்தார். உதவியாளர் இயேசு நாமத்தை காதில் மந்திரித்துக் கொண்டே இருந்தார்.

விண்ணவனுக்குச் சொந்தமான அந்த உயிரை இந்த மண்ணில் நிலை நிறுத்த மண்ணின் பிராண வாயு போதுமானதாக இல்லை. இரண்டு மணிக்கு மூச்சு விட சிரமப்பட்டார் அடிகளார். தீவிர சிகிச் சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அடிகளார் முடிவை நெருங்கி விட்ட தாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. கோவை பிரேஷிதா துறவற மாநில சபை தலைவர் மற்றும் அருட். குருமார்கள் முன்னிலையில் இறுதி பூசுதல் நடைபெற்றது. 2006 அக்டோபர் 20 அதிகாலை 4 மணிக்கு நித்திய இளைப்பாற்றிக்காக அவரது ஆத்துமம் பிரிந்தது. முற்றிலும் அமைதியாகவும், அருள் பிரசன் னத்திலும் நிகழ்ந்தது அந்த மரணம். தூய்மையை நோக்கி தொடர்ந்த அந்த நீண்ட திவ்ய பயணம் நிறைவு பெற்றது! அந்த திவ்ய வாழ்க்கை இலட்சியத்தை எட்டியது.

அடிகளாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு இறுதி மரியாதை உரையாற்றி பாலக்காடு மறை மாவட்ட ஆயர் மேதகு ஜேக்கப் மனத்தோடத்து கூறினார்.

"திருப்பலியில் நாம் ஜெபிப்பது போல, தூய உள்ளத்தோடும், மலர்ந்த முகத்தோடும் மாசற்றோனாய் ஒழுகிய நீதிமான் இந்தத் துறவற குரு அருட்தந்தை டன்ஸ்டன் அடிகளார்."

தான் முழுமையாக இறைவனுக்குச் சொந்தம். தனது இளைப் பாற்றியும் இறுதி கோட்டையும் அவரே, என்று தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்த புனித வாழ்க்கை.

லிட்டில் பிளவர் செமினரியின் சிற்றாலயத்தில் பொது தரிசனத் திற்காக வைக்கப்பட்ட அவரது பூத உடலை சபை அங்கத் தினர் களும், அவரது சீடர்களும், பொதுமக்களும் வரிசையாக நின்று தரி சித்து ஜெபித்து அஞ்சலி செலுத்தினர். அவரது மரணச் செய்தியை கேட்டவர்கள் எல்லாம்

"மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு புனிதரை நாம் இழந்து விட்டோம்"

என்றே மறுமொழிந்தனர். அடிகளாருடன் இதயப்பூர்வமான உறவு கொண்டிருந்தவர்கள்,

"இதுபோன்ற ஒரு நபரை இனி காண்பது அரிது"

எனும் உண்மையைக் கண்ணீருடன் ஏற்றுக்கொண்டனர். பூமியில் உதிர்ந்தும் மலர் ஒன்று மணம் பரப்புவது போல ஒரு புண் ணிய நறுமணமாக எங்கும் கலந்தார் அடிகளார்.

நம்மிடமிருந்து பிரிந்து விண்ணில் வாழும் அடிகளார் நமக்காக வேண்டிக்கொள்ளவும், நம்மோடு இணைந்து, சாந்தி சமாதானம் சந்தோஷத்துக்காக இறை மன்றாட்டுக்கள் ஏறெடுக்கவும் இறை சன்னிதியில் இருக்கிறார். மனதளவிலும், ஜெப வாழ்விலும் அருட். டன்ஸ்டன் அடிகளாருடன் இணைந்திருப்போம். இறை அருள் பெறுவோம்.

அருட்பணியாளர் டன்ஸ்டன் அடிகளாரின்

**வாழ்க்கைப் பயணம்**



27.11.1920 - பிறப்பு

22.09.1935 - துறவற ஆர்வலர்

27.07.1938 - CMI துறவற சபையில் புகுநிலை மாணவர்

24.11.1939 - முதல் வார்த்தைப்பாடு

24.11.1942 - இறுதி வார்த்தைப்பாடு

31.05.1947 - குருத்துவ அருட்பொழிவு

02.06.1947 - முதற் திருப்பலி

22.06.1978 - CMI கோவை மறை மாநிலத்தின் அங்கம்

30.10.2006 - மறைவு

அருட்பணி டன்ஸ்டன் அடிகளாரைப் பற்றி

மேலும் விபரங்களைத் தெரிந்துகொள்ள:

**Preshitha Provincial House**
Little Flower Mission Centre
PO Bharathiyar University,
Coimbatore 641 046, Tamilnadu, India
Ph : +91 63809 90713
www.dunston.in